₹100/-

2 - 11

ஞானகுரு

# மகிழ்ச்சி

நவம்பர் 2023

எஸ்.கே.முருகன்



## அடுத்தவர் மனைவி, கணவன் மீது ஆசையோ ஆசை

# திருமண உறவு
## சிக்கல்கள் தீர்வு மையம்



**திருமணத்திற்கு முன்...**
**திருமணத்திற்கு பின்...**
**சிறப்பு ஆலோசனைகள்**

தொடர்புக்கு
GG Relationship Counseling
Madurai, Viruthunagar +91 80725 89355

www.gyanaguru.com




ஆசிரியர் பக்கம்

# மனிதரை மகிழ்விப்பது கடவுளின் வேலையா..?!

கடவுள் என்று ஒருவர் இருந்தால், அவருக்கு பூமியிலுள்ள 802 கோடி மனிதர்களையும், கோடானுகோடி ஜீவராசிகளையும், அதையும் தாண்டிய எண்ணிக்கையிலான கிரகங்களையும் கவனிக்கவேண்டிய வேலை இருக்கிறது. ஆகவே, அவர் ஒரு சாதாரண மனிதரை மகிழ்விப்பதற்கு ஏதாவது மேஜிக் செய்வார் என்று ஒருபோதும் காத்திருக்கத் தேவையில்லை.

குடும்பத்திலுள்ள அத்தனை நபர்களையும் ஒருவரால் மகிழ்ச்சியாக வைத்திருக்க முடியுமா என்று யோசித்துப் பாருங்கள். அது, சாத்தியமே இல்லை என்பது புரியும். ஏனென்றால், எத்தனை சிரமம் எடுத்துக்கொண்டாலும், யாரையும் முழுமையாக திருப்திபடுத்திவிட முடியாது. எப்போதும் எல்லோருக்கும் புதிது புதிதாக தேவைகள், ஆசைகள் முளைத்துக்கொண்டே இருக்கும். ஓர் ஆசை பூர்த்தி செய்யப்படும் முன்னரே அடுத்த ஆசை முளைத்துவிடும். எத்தனை கொடுத்தாலும் யாருக்கும் போதாது.

எனவே, கடவுள் அல்லது வேறு யாராலும் ஒரு மனிதருக்கு மகிழ்ச்சி கொடுத்துவிட முடியாது. அவருக்கான மகிழ்ச்சியை அவர்களே கண்டடைய வேண்டும். அப்படி மகிழ்ச்சியை கண்டுபிடிப்பதற்கு துன்பம், கவலை, கோபம், பயம் போன்றவை இடையூறாக இருக்கின்றன.

தாங்கள் எதிர்பார்ப்பது நடக்கவில்லை என்றால் கோபமாகிறார்கள். பக்கத்து வீட்டில் புதிய கார் வாங்கிவிட்டால் சோகமாகிறார்கள். சிறிய தலைவலிக்கும் கவலைப்படுகிறார்கள். எதிர்பாராத மழையைக் கண்டு எரிச்சலாகிறார்கள்.

எச்சரிக்கையுடன் நடந்திருந்தால் விழுந்திருக்கத் தேவையில்லை என்று புலம்புவது அர்த்தமற்றது. இனி, கவனமுடன் நடப்பது மட்டுமே முக்கியம். ரயில் தாமதமாவதைக் கண்டு டென்ஷன் ஆவதைவிட, அந்த நேரத்தை ரசிப்பதே புத்திசாலித்தனம். மனிதரால் கட்டுப்படுத்த முடியாத விஷயங்களையும், முடிந்துபோன செயல்களையும் அப்படியே ஏற்றுக்கொள்வதே அறிவு.



நடப்பதை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் வந்துவிட்டால் சின்னச்சின்ன விஷயங்களிலும் மகிழ்ச்சியை கண்டுபிடிக்க முடியும். சிக்னல் வேகமாக விழுந்துவிட்டால் மகிழலாம். சாப்பாடு சூடாக இருந்தால் சந்தோஷப்படலாம். என்னவெல்லாம் இருக்கிறதோ, அவற்றைக்கொண்டு நிறையவே ஆனந்தம் அனுபவிக்கலாம். யாரேனும் திட்டினாலும், அவர்களுடைய அறியாமையை எண்ணி சிரிக்கலாம்.

இப்படி, தங்களைத் தாங்களே மகிழ்விப்பதுதான் உண்மையான மகிழ்ச்சி.

ஆசிரியர்

www.gyanaguru.com




# 2K கிட்ஸ் போர்க்கள வீடு

பழங்களை சுவைத்துக்கொண்டிருந்த ஞானகுருவை சந்திப்பதற்கு ஒரு நண்பரை அழைத்துவந்தார் மகேந்திரன். மிகுந்த குழப்பத்தில் இருந்த நண்பரின் கண்களை உற்றுப் பார்த்த ஞானகுரு புன்னகைக்கத் தொடங்கியதும், அவர் வேகமாக பேசத் தொடங்கினார்.

‘‘நான் என்னுடைய டீன் ஏஜ் மகளின் மீது உயிரையே வைத்திருக்கிறேன். ஆனால், அவள் என்னையும் என் மனைவியையும் ஒரு பொருட்டாக மதிப்பதே இல்லை. அவள் நினைத்தது மட்டுமே வீட்டில் நடக்கவேண்டும் என்று நினைக்கிறாள். நேரத்திற்கு சாப்பிடுவதில்லை, கண்ட நேரத்திலும் தோழிகளுடன் சுற்ற நினைக்கிறாள். தோழிகளுக்கு நிறைய பணம் செலவழிக்கிறாள். இதை தவறு என்று சுட்டிக்காட்டினால் சண்டை வருகிறது... இப்படி எதற்கும் அடங்காத பெண்ணாக இருந்தால் அவளுடைய எதிர்காலம் கெட்டுவிடும், ரவுடிப் பெண்ணாக மாறிவிடுவாள் என்று அச்சமாக இருக்கிறது...” என்று துடிக்கும் உதடுகளுடன் சொல்லி முடித்தார்.

”குழந்தைகள் கண்ணாடி போன்றவர்கள்... அவர்கள் எப்படி மாறுவார்கள் என்று கூறுகிறீர்களோ... அப்படியே ஆகிவிடுவார்கள்...” என்றார் ஞானகுரு.

“இல்லை... நான் அவள் கெட்டுப்போக வேண்டும் என்றோ அல்லது ரவுடிப்பெண்ணாக மாற வேண்டும் என்றோ விரும்பவில்லை...” என்றார் அவசரம் அவசரமாக.

”ஆனால் நீங்கள் மகளிடம் என்ன சொல்கிறீர்கள் என்பதுதான் முக்கியம். நீ அன்பான பெண் என்று சொல்லிக்கொண்டே இருந்தால், அவள் அக்கம் பக்கத்து தோழிகளுடன் அன்பு செலுத்துவாள். அவரிடம் நீ ரொம்பவும் முன்கோபக்காரி, கை நீட்டுபவள் என்று சொல்லிக்கொண்டே இருங்கள். யார் அவளுக்கு கோபமூட்டினாலும் அடித்து விடுவாள். ஏனென்றால், நீங்கள்தான் அவளுக்கு ஒரு வடிவத்தை உருவாக்கிக் கொடுக்கிறீர்கள். உங்கள் வார்த்தைகளே அவளுடைய குணத்தை வடிவமைக்கிறது...”

“அதெப்படி சரியாக இருக்கும்...”

“உதாரணத்துக்கு நான் கூறுவதை செய்து பாருங்கள். என் மகள் எங்கே போனாலும் ஏதாவது ஒன்றை நிச்சயம் மறந்துவிடுவாள் என்று அடிக்கடி சொல்லிக்கொண்டே இருங்கள் அல்லது என் மகள் எங்கே போவது என்றாலும் எல்லா வற்றையும் பலமுறை பரிசோதித்துக்கொண்டே கிளம்புவாள். அதனால் அவள் ஒருபோதும் எதையும் மறப்பதில்லை என்று சொல்லுங்கள்.

இவற்றில், நீங்கள் எதை அடிக்கடி சொல்கிறீர் களோ, அதையே தன்னுடைய குணமாக எடுத்துக் கொள்வாள். வெளியே கிளம்பும்போது அவள் எதையும் கவனிக்காமல் அசட்டையாக கிளம்புவது அல்லது அனைத்தையும் பரிசோதித்துவிட்டு



கிளம்புவது எனும் ஏதேனும் ஒன்றை அவள் நிச்சயம் தேர்வு செய்வாள்....”

“அப்படியென்றால் குழந்தையை வளர்க்க எங்களுக்குத்தான் தெரியவில்லை என்கிறீர்களா..?”

“ஆம்... குழந்தை வளர்ப்பு என்பது குழந்தை எதிர்பார்க்கும் திசையில் இருத்தல் வேண்டும். நீங்கள் சின்ன வயதினராக இருந்த நேரத்தில், ’உங்கள் பெற்றோருக்கு சரியாக பிள்ளை வளர்க்கத் தெரியவில்லை’ என்று நினைத்திருப்பீர்கள். ஆனால், வளர்ந்தபிறகு உங்கள் நம்பிக்கையை மாற்றிக் கொள்கிறீர்கள். அதாவது, பெற்றோர் சரியாகத்தான் வளர்த்தார்கள் என்றும் அதை நீங்கள்தான் சரியாக புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறீர்கள். அதனால், உங்கள் பெற்றோர் காட்டிய வழியிலே நீங்களும் பிள்ளையை அடக்குகிறீர்கள். அதுவே இரண்டு தலைமுறைக்கும் இடையில் சண்டையை உருவாக்குகிறது.

முன்பு பெற்றோர் முன் நின்று பேசுவதற்குத் தயங்கிய பிள்ளைகள் இருந்தார்கள். அதனால் பெற்றோரர் முகத்துக்கு நேரே குறை சொல்லும் தைரியம் அவர்களுக்கு இல்லை. ஆனால், இன்றைய குழந்தைகள் நிஜத்தை தைரியமாகப் பேசுகிறார்கள். எனவே, அவர்களுடைய சுதந்திரத்துக்கும் ஆசைகளுக்கும் மதிப்பு தரவேண்டியது உங்கள் கடமை...”

“எல்லா நேரமும் செல்போனுடன் இருக்கிறாளே... அதை தடுக்க முடியாதா...?”

“தடுக்க முடியாதா என்று எதிர்மறை கேள்வியே வேண்டாம். குறைவான நேரமே செல்போன் பயன்படுத்த வேண்டும் என்று ஆக்கபூர்வமாக ஆசைப்பட வேண்டும். என்னுடைய பெண் மிகுந்த புத்திசாலி. தினமும் ஒரு மணி நேரத்துக்கு மேல் செல்போன் பயன்படுத்த மாட்டாள். அதிக நேரம் செல்போன் பயன்படுத்துவது நல்லதில்லை என்பது அவளுக்கே தெரியும். படிக்கும் நேரத்தில் செல்போனை தொடவே மாட்டாள் என்று அவளிடமும், மற்றவர்களிடமும் சொல்லிக்கொண்டே இருங்கள். நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ அதை மட்டுமே அவளிடம் நேர்மறையாக சொல்லுங்கள். அதிகம் செல்போன் பார்த்தால் முட்டாளாகிவிடுவாய் என்று சொல்வதற்கும் குறைந்த நேரம் செல்போன் பார்த்தால் புத்திசாலியாகிவிடுவாய் என்று சொல்வதற்கும் நிறையவே வித்தியாசம் உள்ளது...”

“இது அவர்களுக்குப் புரியுமா..?”

“ஒரே ஒரு முறை சொன்னதும் உங்கள் மகள் மாறிவிடுவாள் என்று எதிர்பார்க்க வேண்டாம். மீண்டும் மீண்டும் பார்க்கும் நபரிடம் எல்லாம் தெரிந்தவர்களிடம் எல்லாம், உங்கள் மகளின் தோழிகளிடம் எல்லாம் நேர்மறையாக அவள் பழக்கத்தை பாராட்டிக்கொண்டே இருங்கள். ஏதேனும் ஒரு பொழுதில் சட்டென மாறிவிடுவாள்.

உங்கள் மகளுக்கு இசையில் நல்ல ஞானம் இருக்கிறது என்று சொல்லுங்கள். பள்ளியில் பாட்டுப்போட்டி வைத்தால் தைரியமாக சேர்வாள். உங்கள் பெண்ணுக்கு இளகிய மனம் என்று சொல்லுங்கள். யாரேனும் பிச்சை கேட்டால், உடனே காசு போடுவாள். உங்கள் பெண்ணுக்கு பொதுஅறிவு அதிகம் என்று சொல்லுங்கள். அவள் புதிய செய்திகளை தேடித்தேடி அறிந்துகொள்வாள். என் மகளுக்கு ராக்கெட் படிப்பு ரொம்பப் பிடித்திருக்கிறது என்று சொல்லுங்கள், அவள் வானவியல் படிப்புக்கு தயாராகிவிடுவாள்.

ஆனால், எல்லா பெற்றோர்களும் எதிர்மறை சிந்தனைகளையே பிள்ளைகள் மனதில் செலுத்துகிறார்கள். லேட்டாகத்தான் வருவாள், படிப்பு ஏறாது, ஊர் சுற்றத்தான் லாயக்கு என்றெல்லாம் சொல்லிச் சொல்லி அவர்களை அப்படியே மாற்றுகிறார்கள்...”

“இப்படி எத்தனை காலம்தான் நம்பிக்கையுடன் சொல்ல வேண்டும்..?”

‘‘அவள் உனக்கு மகளாக இருக்கும் வரை அல்லது நீ அவளுக்கு அப்பாவாக இருக்கும் வரையிலும் சொல்லிக்கொண்டே இரு...” என்று சிரித்தார் ஞானகுரு.


அந்த அப்பாவுக்கும் சிரிப்பு தொற்றிக்கொண்டது.


## மந்திரச்சொல்

விளக்கம் சொல்வதும் விளக்கம் கேட்பதும் ஒரு வகையில் அவமானமே.









# கடவுளை நிரூபிக்க வேண்டியது யார்..?

கடவுள் நம்பிக்கையில் ஒவ்வொரு நபரும் ஒரு ரகம். ஏனென்றால், எல்லா மனிதர்களும் எல்லா நேரங்களிலும் கடவுள் பற்றிய சிந்தனையில் உறுதியுடன் இருப்பதில்லை. தங்களுக்கு துக்கம், சோகம் நிகழும்போது, ‘கடவுள் இருக்கிறாரா… ஏன் இத்தனை துன்பம் கொடுக்கிறார்…’ என்று அவநம்பிக்கை கொள்கிறார்கள். மகிழ்ச்சி வரும் நேரத்தில் கடவுளுக்கு மனதார நன்றி சொல்வதில்லை என்றாலும், எல்லாம் கடவுள் கிருபை என்றே நம்புகிறார்கள்.

இந்த உலகில் கடவுள் நம்பிக்கை உள்ள மனிதர்களே அதிகம். இந்துக்கள் சிவன், விஷ்ணு போன்ற கடவுள் மீதும், இஸ்லாமியர்கள் அல்லா மீதும், கிறிஸ்தவர்கள் தேவன் மீதும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இவர்கள் யாருமே மற்ற மதத்தின் கடவுளை மதிப்பதும் நம்புவதும் இல்லை என்பது ஆச்சர்யமான முரண்.

கடவுள் நம்பிக்கையின் அடிப்படையில் மக்களை நான்காகப் பிரிக்கலாம்.

முதல் வகையினர் கடவுள் மீது முழு நம்பிக்கையாளர்கள். தனக்கு என்ன துன்பம் வந்தாலும், சிக்கல்கள் வந்தாலும் இவர்கள் கடவுள் மீது நம்பிக்கை இழப்பதில்லை. கடவுள் தன்னை பரிசோதிக்கிறார் என்றே எல்லா பிரச்னைகளையும் எடுத்துக்கொள்கிறார்கள். மேலும், இன்ப, துன்பங்களை முன் ஜென்ம வினை, செய்த பாபம், புண்ணியம், கொடுப்பினை என்று எல்லாவற்றையும் அப்படியே ஏற்றுக்கொள்கிறார்கள்.

இரண்டாவது வகையினர் பாதி நம்பிக்கை கொண்டவர்கள். அதாவது கடவுள் இருக்கலாம் அல்லது இல்லாமல் போகலாம். ஆனால், அவரை கும்பிடுவதால் நமக்கு எந்த இழப்பும் கிடையாது. ஆகவே, சும்மாவாச்சும் கும்பிட்டு வைப்போம். ஒரு வேளை கடவுள் இருந்தால், தன்னுடைய வேண்டுதலுக்காக நன்மை தரட்டும் என்ற கொஞ்சம் அலட்சியம் அதேநேரம் ஆதாயம் எதிர்பார்க்கும் மனிதர்கள்.

மூன்றாவது வகையினர், முழுமையாக கடவுள் மறுப்பாளர்கள். அதாவது, இந்த உலகில் இயற்கையும் விஞ்ஞானமும் தவிர வேறு எதுவும் இல்லை. கடவுள் என்று ஒன்று இருக்க முடியாது என்று ஆணித்தரமாக நம்புபவர்கள். இந்த பிரபஞ்சம் பற்றி பதில் தெரியாத கேள்விகளை எதிர்கால விஞ்ஞானிகள் நிச்சயம் தீர்த்துவைப்பார்கள் என்பதே இவர்களுடைய கொள்கை.

இவர்களைத் தாண்டிய நான்காவது வகை மனிதர்கள் இருக்கிறார்கள். அதாவது, நேரத்துக்கும் சூழலுக்கும் ஏற்ப மாறுபவர்கள். கோயிலில் போய் மொட்டை போட்டு நேர்த்திக்கடன் நிறைவேற்றும் அளவுக்கு கடவுள் மீது நம்பிக்கை வைத்திருப்பார்கள். யாரேனும் கடவுள் மறுப்பாளர் உரையைக் கேட்டால் சட்டென கடவுள் இல்லை என்ற கோட்பாட்டுக்கு மாறிவிடுவார்கள். குறிப்பிட்ட கோயிலுக்குப் போய் வந்ததால் எனக்கு நோய் தீர்ந்துவிட்டது என்று யாரேனும் சொன்னால், உடனே மீண்டும் கடவுள் ஆதரவாளராக மாறிவிடுவார்கள். இப்படி காலம் முழுக்க சொந்தக் கருத்து ஏதுமின்றி கண்ணாமூச்சு ஆடிக்கொண்டே இருப்பவர்கள் நான்காம் வகை. கவிஞர் கண்ணதாசன் உள்ளிட்ட நிறைய வி.ஐ.பி.கள் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்.

கடவுள் நம்பிக்கையாளர்கள் எண்ணிக்கையே உலகில் மிக அதிகமாக இருப்பதன் காரணம் தெரியுமா?

குழந்தையாக இருக்கும்போதே அவர்களுக்கு மதம், கடவுள் பற்றிய எண்ணங்கள் ஆழமாக விதைக்கப்படுகிறது. சின்ன வயதில் இருந்து தாய் தந்தையின் பேச்சைக் கேட்டே பிள்ளைகள் வளர்கிறார்கள்.

‘பொய் சொல்லக்கூடாது’, ‘திருடுனா போலீஸ் பிடிச்சிடும்’, ‘நல்லா படிச்சா பாராட்டு கிடைக்கும்’ என்று சொல்லும் அப்பாதான், ‘வருஷா வருஷம் குல தெய்வத்தை கும்பிடலைன்னா வீட்ல ஏதாச்சும் தடங்கல் வந்துக்கிட்டே இருக்கும்’ என்று சொல்கிறார். ஆகவே, அப்பா சொல்வதை அப்படியே நம்புகிறார்கள். அப்பாவுக்கு எல்லாம் தெரியும், அப்பா பொய் சொல்ல மாட்டார் என்ற நம்பிக்கையினால், கடவுளையும் அப்படியே ஏற்றுக்கொள்கிறார்கள். அப்பா, உறவினர்கள், அக்கம்பக்கத்தினர், ஊரு ஜனம் என்று பெரிய கூட்டமே கடவுளை கும்பிடுவதால், கடவுள் நம்பிக்கையில் இவர்களுக்கு எந்த சந்தேகமும் வருவதில்லை.

கடவுள் மீது நம்பிக்கை வைத்திருப்பது, இன்னொரு வகையில் அவர்களுக்கு சுலபமாக இருக்கிறது. அதாவது, நோயினால் அடிக்கடி அவதிப்படுபவர் என்றால், முன் ஜென்ம பாவத்தினால் இப்படி அடிக்கடி நோய் வருகிறது என்று சுலபமாக தங்களைத் தாங்களே தேற்றிக்கொள்கிறார்கள். உலகில் எல்லா பிரச்னைகளுக்கும் கடவுளை விடையாக வைத்துக்கொள்கிறார்கள். நல்லவை, தீயவை எல்லாமே கடவுள் லீலையாகப் பார்க்கிறார்கள்.

பெருவெடிப்பு, கோடானு கோடி நட்சத்திரங்கள், புயல், சூறாவளி என எல்லாவற்றுக்கும் பகவானே காரணம் என்பார்கள். சிலருக்கு மட்டும் தொடர்ந்து தோல்வி மேல் தோல்வி கிடைப்பதற்கு காரணம் கேட்டால், ‘அவருடைய முன் ஜென்ம பாபம்’ என்பார்கள். இப்படி எல்லாவற்றுக்கும் சுலப விடை அவர்களிடம் உள்ளது.

இதனை நாத்திகர்கள் மறுக்கும்போது, கடவுள் இல்லை என்று நிரூபிக்குமாறு சவால் விடுகிறார்கள்.மூலிகையில் பெட்ரோல் தயாரிக்க முடியும் என்று ராமர் சொன்னால், உடனே அதை நிரூபித்துக் காட்டச் சொல்கிறார்கள். மின்சாரம், கார், விமானம் கண்டுபிடித்தபோதும், நிரூபிக்கச் சொன்னார்கள். இப்போதும் புதிய கண்டுபிடிப்புகள், ஆய்வுகள் என்றால் அதனை வெளியிடுபவரே நிரூபித்துக் காட்ட வேண்டும்.

ஆனால், இந்த உலகை கடவுள் படைத்தார் என்பதையோ, செத்துப்போன இயேசு திரும்பிவந்தார் என்பதையோ கடவுள் ஆதரவாளர்கள் நிரூபித்துக் காட்ட மாட்டார்கள். அப்படி நடைபெறவில்லை என்று ஆய்வாளர்கள்தான் நிரூபிக்க வேண்டும் என்கிறார்கள். பூமியானது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனை சுற்றிவருகிறது என்று கலீலியோ ஆதாரத்துடன் சொன்னபோது, அவரை மதவாதிகள் கிண்டலும் கேலியும் செய்தார்கள். காலப்போக்கில் அத்தனை ஆய்வாளர்களும் உண்மையை விளக்கிய பிறகே, இதனை மதவாதிகள் ஏற்றுக்கொண்டார்கள்.

ஆகவே, கடவுள் இருக்கிறார் என்பதை நிரூபிக்கவேண்டிய கட்டாயத்தில் இப்போது கடவுள் நம்பிக்கையாளர்கள் இருக்கிறார்கள். யாராவது முன் வந்தால் நல்லது.

www.gyanaguru.com

# ஆபாச படங்களில்
## சகோதர, சகோதரிகள்

அது ஒரு காலம். ‘அந்த’ மாதிரி படங்கள் பார்ப்பதற்கு முக்காடு போட்டபடி திரையரங்கம் செல்லவேண்டி இருந்தது. ‘அந்த’ மாதிரி புத்தகங்கள் படிப்பதற்கு ரகசிய இடம் தேடவேண்டியிருந்தது. ’அந்த’ மாதிரி பெண்களைத் தேடி ஊர் விட்டு ஊர் போகவேண்டியிருந்தது.


இப்போது எல்லாமே செல்போனுக்குள் குடியேறிவிட்டது. யாருக்கும் தெரியாமல் நிம்மதியாக விதவிதமாக போர்ன் வீடியோக்களை ஆண், பெண் என்று பேதமில்லாமல் எல்லோரும் பார்க்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், பிஞ்சு வயதிலேயே சகலமும் பார்த்துவிடுகிறார்கள். இவர்களிடம், மூடி மறைப்பதற்கு எதுவும் இல்லை.

டிஜிட்டல் யுகத்தில் இந்த மாற்றத்தை தவிர்க்கவும் தடுக்கவும் முடியாது. எனவே சரியான வயதுக்கு முன்பே போர்ன் வீடியோ பார்ப்பவர்களுக்கு உண்மையை போதிப்பதுதான் ஒரே வழி.

ஆனால், போர்ன் வீடியோவை கூட்டமாக சேர்ந்து பார்க்கும் நண்பர்கள் கூட, அதுகுறித்து விலாவாரியாகப் பேசுவதற்கும் விவாதிப்பதற்கும் விரும்புவதில்லை. ஒவ்வொரு நபரும் தனித்தனியே இந்த இன்பத்தை ருசிக்க ஆசைப்படுகிறார்கள். எனவே போர்ன் வீடியோக்களை தனிமையில் பார்த்து அடிமையாகிறார்கள்.

இப்படி தனிமையில் ரசிக்கும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருவதுதான் ஆபத்தான நிலை. கொஞ்சம் ஓய்வு அல்லது தனிமை கிடைத்தால் சட்டென போர்ன் தளத்துக்குத் தாவிவிடுகிறார்கள். மாணவ, மாணவிகள், இளைஞர்கள், முதியவர்கள் என்று எல்லோரையும் ஆட்டிப்படைக்கிறது போர்ன் வீடியோக்கள். இதற்கு அடிமையானதே தெரியாமல் பொழுதைக் கழிக்கிறார்கள்.






யாரெல்லாம் இந்த போர்ன் அடிமைகள்..?

ஒரு நாளில் ஐந்து முதல் பத்து நிமிடங்களுக்கு மேல் போர்ன் படங்கள் பார்க்கும் அத்தனை பேரும் அடிமைகள். ஆனால், தாங்கள் ஆபாச படங்களுக்கு அடிமை என்பதை யாருமே ஒப்புக்கொள்வதில்லை. ஏனெனில் இதற்கென எந்த நேர வரையறையும் பொதுவில் வகுக்கப்படவில்லை. ஆகவே, எத்தனை மணி நேரம் பார்த்தாலும், இது தவறு என்பதை அறியாமல் மீண்டும் மீண்டும் பார்க்கிறார்கள்.

இந்த மாதிரி படங்களை ஒருவர் பார்க்கும் நேரம் அதிகரித்து வருகிறதா என்பது முதல் கேள்வி. போர்ன் பார்ப்பதற்கு எப்போது வாய்ப்பு கிடைக்கும் என்று ஆவலுடன் காத்திருக்கிறாரா அல்லது வாய்ப்பை உருவாக்கிக்கொள்கிறாரா என்பது இரண்டாவது கேள்வி. இந்த படங்கள் பார்த்தபிறகு, மனதில் ஏதேனும் குற்றவுணர்ச்சி தோன்றுகிறதா என்பது மூன்றாவது கேள்வி.

இந்த மூன்று கேள்விகளுக்கும் ஆம் என்று பதில் அளித்திருந்தால், போர்ன் வீடியோவுக்கு அவர் அடிமை என்பதே அர்த்தம். இரண்டுக்கு ஆம் என்றாலும் அவர் அடிமையே.

இதன் அடுத்தகட்டம் என்ன தெரியுமா..? தூக்கம், உணவு போன்றவை மீது நாட்டம் குறையும். தூங்குவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்திலும், உணவு சாப்பிடும்போதும் போர்ன் படங்கள் பார்ப்பதற்கு மனம் ஏங்கும்.

திருமணமானவர் என்றால், இந்த வீடியோக்களில் காட்டப்படும் பல்வேறு நிலைகளை மனைவி அல்லது கணவனுடன் செய்துபார்க்க முடியவில்லையே என்ற கோபமும், கழிவிரக்கமும் ஏமாற்றமும் ஏற்படும்.

இதனால் மன அழுத்தம், கோபம், பயம், அச்சம் போன்ற அத்தனை பிரச்னைகளும் வந்துசேர்ந்துவிடும். இவற்றை வெளிக்காட்டக்கூடாது என்பதால் எல்லா நேரமும் தனிமையை தேர்வு செய்வார்கள். இந்த விஷயத்தை மருத்துவரிடம் மனம் விட்டுப் பேசுவதற்கும் விரும்ப மாட்டார்கள். தான் ஒரு குற்றவாளி என்ற எண்ணத்துக்கு மாறியிருப்பார்கள் என்பதால் பார்க்கும் வேலை மற்றும் குடும்ப உறவுகளில் இவர்களுக்கு நாட்டம் குறைந்துவிடும். ரத்தவோட்டம் பாதிக்கப்பட்டு உடல் மற்றும் மனநலக் குறைபாட்டில் சிக்கிக்கொள்வார்கள்.

ஒரு கட்டத்தில், இனி போர்ன் படங்கள் பார்க்க வேண்டாம் என்று நினைத்தாலும், அது தீர்வாக இருப்பதில்லை. போர்ன் பார்க்காத நேரத்திலும், பார்த்து முடித்த பிறகும் எதையோ பறிகொடுத்த துக்கத்தில் இருப்பார்கள். .இவர்களை இந்த பிரச்னையிலிருந்து தாங்களாகவே வெளிவருவது சிரமமாகிவிடும்.

விடுதலை எப்படி..?

போர்ன் பார்ப்பது குற்றம் அல்ல என்பதையும், இதனால் எதையும் இழக்கவில்லை என்பதையும் முதலில் உணரவைக்க வேண்டும். அப்போதுதான், இந்த பழக்கத்தில் இருந்து அவர்களால் வெளியேற முடியும்.

இந்த நேரத்தில் பெரும்பாலான நபர்கள் தகுதியான மருத்துவர்களிடம் போவதில்லை. ஏதேனும் சித்த வைத்தியர் அல்லது யாராவது ஒருவரிடம் ஆலோசனை கேட்டு கண்டதையும் மருந்து என்று சாப்பிட்டு ஏமாந்து போகிறார்கள்.

**மந்திரச்சொல்**

கடினமான வேலைகளை முதலில் செய்யுங்கள். எளிதான வேலைகள் அதுவாகவே முடிந்துவிடும்.

> “எந்தெந்த நேரங்களில் போர்ன் படங்கள் பார்ப்பதற்கு ஆர்வம் வருகிறதோ, அந்த நேரங்களில் உடனடியாக தனிமையில் இருந்து வெளியே வந்துவிட வேண்டும். நிறைய ஆட்கள் நடமாடும் இடத்துக்குச் சென்றாலே மனதில் இருக்கும் ஆர்வம் குறைந்துவிடும். அதுபோன்ற தருணங்களில் குடும்ப உறுப்பினர் அல்லது நண்பர்களிடம் மனம்விட்டுப் பேசலாம் அல்லது வாக்கிங் செல்லலாம்.”

ஏனென்றால், அலோபதி மட்டுமே போர்ன் பார்ப்பதையும் சுய இன்பம் செய்வதையும் குற்றமாகக் கருதுவதில்லை. மற்ற மருத்துவர்கள் இதுகுறித்து குற்றவுணர்ச்சியை மனதில் விதைத்துவிடுவார்கள்.

இந்த பழக்கத்திலிருந்து மீள நினைப்பவர்கள், முதலில் செல்போனில் இருக்கும் செக்ஸ் தளங்கள், ஆப்கள் போன்ற அத்தனையையும் டெலிட் செய்து விட வேண்டும். அடுத்தபடியாக செல்போனுக்கு சைல்ட் லாக் போட வேண்டும். அவரே நினைத்தாலும், போர்ன் படங்களை பார்க்க முடியாத அளவுக்கு செக்யூரிட்டி பலமாக இருக்க வேண்டும். அவருக்கே அவர் மீது நம்பிக்கை இல்லையென்றால், வேறு ஒரு நண்பர் மூலம் செல்போனுக்கு லாக் போட்டு, அதன் பாஸ்வேர்டு கிடைக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

எந்தெந்த நேரங்களில் போர்ன் படங்கள் பார்ப்பதற்கு ஆர்வம் வருகிறதோ, அந்த நேரங்களில் உடனடியாக தனிமையில் இருந்து வெளியே வந்துவிட வேண்டும். நிறைய ஆட்கள் நடமாடும் இடத்துக்குச் சென்றாலே மனதில் இருக்கும் ஆர்வம் குறைந்துவிடும். அதுபோன்ற தருணங்களில் குடும்ப உறுப்பினர் அல்லது நண்பர்களிடம் மனம்விட்டுப் பேசலாம் அல்லது வாக்கிங் செல்லலாம்.

மனதை திசை திருப்புவதற்காக ஜிம்மில் சேர்வது, வயலின் கற்றுக்கொள்வது என்று ஏதேனும் ஒரு புதிய பொழுதுபோக்கில் கவனம் செலுத்தலாம். செக்ஸ் தளத்துக்குச் செல்வதற்கு எவையெல்லாம் தூண்டுகோலாக இருக்கின்றனவோ, எந்த நண்பர்கள் இதுபற்றி அதிகம் பேசுவார்களோ.. அவர்களிடம் இருந்து எட்டவே தள்ளி நில்லுங்கள்.

முன்பு அதிக நேரம் போர்ன் படங்களை பார்த்தேன், இப்போது அதிலிருந்து மீண்டுவிட்டேன் என்று தைரியமாக பிறரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கலாம். டைரியில் போர்னோ படங்கள் எத்தனை நேரம் பார்த்தீர்கள் என்பதை விலாவாரியாக எழுதிப்பார்த்தாலே, எத்தனை நேரம் வீணாகக் கழிந்திருக்கிறது என்பதை அறிந்துகொள்ள முடியும். இப்படி வீணாகக் கழிந்த நேரத்தைப் பார்த்தாலே, யாருக்கும் மீண்டும் போர்ன் பார்க்கும் ஆர்வமும் ஆசையும் தோன்றாது. போர்ன் அடிமையாக இருப்பதன் காரணமாக நெருங்கிய உறவுகளை மட்டுமின்றி நல்ல நண்பர்களையும் இழக்க வேண்டி வரலாம். ஆகவே, இந்த அடிமைத்தனத்தில் இருந்து வெளியே வருவது மிகவும் முக்கியம். அப்படி, வெளியே வருவதில் சிரமம் இருந்தால், உடனடியாக உங்களுக்குத் தெரிந்த மருத்துவரை அல்லது மனநல ஆலோசகரை அணுகுங்கள்.

ஏனென்றால், அளவுக்கு மீறிய அமிர்தமே நஞ்சு எனும்போது, விஷம் போன்ற போர்ன் படங்கள் நன்மை செய்யுமா என்ன.?

## ஞானகுரு காட்டும் வழி

ஒரு முறை ஞானகுருவை சந்தித்த இளைஞன் ஒருவன், ’செக்ஸ் வீடியோக்கள் பார்ப்பதற்கு பழகிவிட்டேன். அதனை நிறுத்தவே முடியவில்லை. போர்ன் படங்கள் பார்க்காத தருணங்களில் எதையோ இழந்தது போல் உணர்கிறேன். பார்த்து முடித்ததும் பெரிய தப்பு செய்ததாக குற்றவுணர்ச்சியில் தவிக்கிறேன்... எனக்கு பெருங்குழப்பமாக இருக்கிறது...’ என்று கேட்டான்.

அவனுக்கு ஞானகுரு, ‘அடுத்த வீட்டு படுக்கையறையை எட்டிப் பார்ப்பது எல்லோருக்கும் பிடித்த விஷயமே. அதனாலே அதை ரசித்துப் பார்க்கிறார்கள். மான்களை சிங்கம் வேட்டையாடுவது பசிக்காக மட்டும்தான். ஆனால், அதையும் படமாக்கி பார்த்து ரசிக்கும் குரூர மனப்பான்மை மனிதர்களிடம் இருக்கிறது. அப்படித்தான், மனிதர்களை படுக்கையறையில் நடிக்க வைத்து படம் எடுக்கிறார்கள்.

இந்த படங்களில் நடிக்கும் பெண்ணும், ஆணும் சிறு பணத்துக்காக மட்டுமே நடிக்கிறார்கள் என்பதை ஒவ்வொரு நபரும் புரிந்துகொள்ள வேண்டும். இதனை பார்க்கும் ஒவ்வொரு நபரும் ஒருவகையில் இந்த படம் தயாரிப்பதற்கு தூண்டுதலாக இருக்கிறார்கள். ஆகவே, இப்படி படம் எடுப்பவர்கள் மீது கோபமும், நடிப்பவர்கள் மீது பரிதாபமும் இருத்தல் வேண்டும். நமது குடும்பப் பெண்ணை இப்படி ஒரு சூழலில் பார்ப்பதற்கு நமக்கு மனமும் ஆசையும் இருக்கிறதா என்ற கேள்வியை ஒவ்வொரு நபரும் எழுப்பிக்கொள்ள வேண்டும்.

இதில் நடிக்கும் ஒவ்வொரு பெண்ணையும் குடும்பப் பெண்ணாகவும், ஒவ்வொரு ஆணையும் சகோதரனாக பார். ஒவ்வொரு முறை போர்ன் பார்க்க ஆர்வம் வரும்போது, அதில் நடித்திருப்பது உங்கள் நெருங்கிய உறவினர் என்ற எண்ணம் வரட்டும்... அப்படி நினைத்தால் கண்டிப்பாக வீடியோவை பார்க்க முடியாது...” என்றார் ஞானகுரு.

சரிதான்.


www.gyanaguru.com

# வார்த்தைகளே வரம்

இப்போது மிகப்பெரிய எதிரி என்பவர், ஒரு காலத்தில் மிகச்சிறந்த நண்பனாக இருந்தவரே

**அமீஷ்**

மிகவும் பிடித்தமானவர்களின் மௌனமே, உலகின் கூர்மையான ஆயுதம்

**அதிரூபன்**

காதல் ஒருவரை தகுதியானவராகக் கருதினால், அதுவே அவரை வழி நடத்தும்.

**கலீல் ஜிப்ரான்**

மனிதர்கள் வாழவில்லை, அவர்களுடைய சுய சரிதையை எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்

**நாடன் சூர்யா**

ஒருவர் கோபத்தில் எடுக்கும் முடிவு, அவரைத் தவிர வேறு யாரையும் பாதிக்காது...!!

**ஜனனி**

ஒரு பெண்ணின் உடலில் உள்ள மிக அழகான வளைவு அவளது புன்னகை...!!

**பாப் மார்லி**

ஒரு மனிதனின் மொத்த வாழ்வையும் ஒரு புத்தகத்தின் மூலம் மாற்றமுடியும் என்பதை மக்கள் உணர்வதில்லை...!!!

**மால்கம் எக்ஸ்**

நேர்மை தருகின்ற நிம்மதியை வேறு எதுவும் தந்துவிடாது

**வெ.பூபதி**

எந்தப் புகைப்படமும் அதை எடுத்த நாளில் திருப்தி தருவதில்லை. அது அழகாக மாற, அந்த மனிதனுக்கு வயதும் கூட வேண்டியிருக்கிறது.

**அசோகமித்திரன்**

ஒழுக்கம் என்பது கெட்ட செய்கையிலிருந்து விலகி இருப்பது அல்ல, கெட்ட செய்கையைச் செய்யாமல் இருப்பதுதான்.

**பெர்னாட்ஷா**

www.gyanaguru.com

www.gyanaguru.com



# பதினாறு வேண்டாம் பத்தே போதும்

திருமண பந்தத்தில் நுழைபவர்கள் 16 செல்வங்கள் பெற்று பெறுவாழ்வு வாழவேண்டும் என்று வாழ்த்து பெறுவதுண்டு. அந்த பதினாறும் பெறுவது புற வாழ்வுக்குத் தேவைப்படலாம். அக வாழ்வு சிறப்பதற்கும் தம்பதியருக்குள் அன்பும் அன்னியோன்யமும் பெருகி வழிவதற்கும் ஆசை இருக்கிறதா..? இந்த 10 கட்டளைகளை மணமக்கள் கடைபிடித்தால் போதும், அவர்கள் வாழ்க்கை ஆனந்தமோ ஆனந்தம்.

1. உடல் ஆரோக்கியத்தை பாதுகாப்பதிலும், அழகைப் பேணுவதிலும் இருவரும் என்றென்றும் அக்கறை செலுத்த வேண்டும். திருமணம் ஆகிவிட்டதே என்ற அலட்சியத்தினால் பெண் குண்டாவதும், ஆண் தொப்பை போடுவதும் திருமண பந்தத்திற்கு பங்கம் விளைவிப்பவை.

2. இன்று புதிதாகப் பிறந்ததாக எண்ணிக்கொள்வது மிக முக்கியம். பழைய வாழ்க்கை, பழைய உறவு, பழைய நட்புகளை குறைத்துக்கொண்டு, புதிய பந்தத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். கடந்தகாலத் தவறுகளை மறந்துவிட்டு, புதிய வாழ்க்கைக்கு உண்மையாக இருப்பது அவசியம்.

3. இரண்டு பக்க உறவுகளையும், நண்பர்களையும் ஒரே கண்ணோட்டத்தில் அணுகுதல் முக்கியம். யாரையும் உயர்த்திப் பிடிக்கவும் வேண்டாம், யாரையும் மட்டம் தட்டுவதும் வேண்டாம்,

4. கணவன், மனைவிக்கும் சின்னச்சின்ன ஊடல்கள் நிகழ்வது சகஜம்தான். சந்தேகம் ஒருபோதும் நுழைந்துவிடக் கூடாது. கருத்துவேறுபாடு வரும்போது தம்பதியர் இருவரும் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டுமே தவிர, எந்த காரணம் கொண்டும் யாருடைய உறவையும், நட்பையும் சமரசம் பேசுவதற்கு அழைக்கக்கூடாது.

5. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுங்கள். வேலைகளை பங்கு போட்டு செய்வதே நல்ல பண்பு. யாரும், யாருக்கும் அடிமையாக இல்லாமல், நட்புடன் பழகுதல் வேண்டும். வெளியே எங்கு போவதாக இருந்தாலும் தம்பதி சமேதராகச் செல்ல வேண்டும். ஒருவர் முன்னே, ஒருவர் பின்னே என்பதெல்லாம் வேண்டவே வேண்டாம். பொது இடங்களில் துணையைப் பற்றி ஒருபோதும் குற்றம், குறை பேசக்கூடாது.

6. இருவரும் வேலைக்குச் செல்பவராக இருந்தாலும் சரி, ஒருவர் வேலைக்குச் செல்பவராக இருந்தாலும் சரி, அன்றன்று அலுவலகத்தில் அல்லது வீட்டில் என்ன நடந்தது என்பது குறித்து, குறைந்தது அரை மணி நேரம் பேசுவது நல்லது.



7. பணத்தை இருவரும் சேர்ந்தே கையாள வேண்டும். பிறருக்கு பண உதவி செய்வது, கடன் கொடுப்பது அல்லது கடன் வாங்குவது போன்ற எல்லாமே இருவருக்கும் தெரிந்தே நடக்க வேண்டும். ஒருவருக்குப் பிடிக்காத விஷயங்களை அடுத்தவர் நிச்சயம் செய்யக்கூடாது. என் பணம் என்று யாரும் பேசக்கூடாது.

8. இருவரும் அவரவர் விருப்பங்களுடன் வாழ்வது முக்கியம். யாருக்காகவும் யாரும் மாறவேண்டும் என்ற கட்டாயத்தை ஏற்படுத்த வேண்டாம். திருமணத்திற்கு முன்பு சில தீய பழக்கங்களில் விழுந்திருந்தால், அதிலிருந்து மீண்டு வருவதற்கு அவகாசம் கொடுத்து காத்திருங்கள். ஒரே நாளில் எந்த மாற்றமும் நிகழாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

9. தினமும் ஒரு முறையாவது ஒருவரையொருவர் பாராட்டுங்கள். இன்று இட்லிக்கு வைத்த சட்னியின் சுவை அபாரம் என்றோ, ஊதா கலர் சட்டையில் ஸ்டைலாக இருக்கிறீர்கள் என்றோ சின்னச்சின்ன விஷயங்களுக்கும் பாராட்டுவதால் அன்பு அதிகரிக்கும். ரசனையும் பெருகும்.

10. வேலை, பதவி உயர்வு, வீடு, கார் போன்ற எந்த ஒரு எதிர்காலத் திட்டத்துக்காகவும் தாம்பத்திய உறவை தள்ளிப்போடாதீர்கள். 30 வயதுக்கு மேல் குழந்தை பிறப்பு பல்வேறு சங்கடங்களைத் தரக்கூடும் என்பதால், விரைவில் குழந்தை பெற்றுக்கொள்வதே நல்லது. அதுதான், அடுத்த தலைமுறைக்கு தம்பதியர் செய்ய வேண்டிய முக்கியமான முதல் கடமை. குழந்தை என்பது தாம்பத்தியத்தை உறுதியாக்கும் இரும்புச்சங்கிலி.


www.gyanaguru.com



# பிடிக்காத வேலையில் நீடிக்கலாமா..?

இப்போது செய்துவரும் வேலை பிடிக்கவே இல்லை என்றாலும், குடும்ப நன்மைக்காக அந்த வேலையை செய்துவருகிறேன் என்று வேண்டாவெறுப்புடன் பலரும் சொல்கிறார்கள். அதேபோல், படித்த படிப்புக்கும், அனுபவத்திற்கும் ஏற்ற வேலையைச் செய்யாமல் கிடைத்த வேலைகளைச் செய்பவர்களும் அதிகம்.

இப்படிப்பட்ட திரிசங்கு நிலையில் சிக்கித்தவித்த காவல் துறை உயர் அதிகாரி ஒருவர் ஞானகுருவை சந்திக்க வந்தார்.

“நான் காவல் துறையில் உயர் பதவியில் இருக்கிறேன். என் சொல்லை கட்டளையாக ஏற்று செய்வதற்கு நிறைய பேர் இருக்கிறார்கள். என்னால் பலருக்கு எளிதாக உதவ முடிகிறது. ஆனால், நான் இந்த காக்கி உடுப்புக்குள் ஒரு கைதியாக சிக்கிக்கொண்டதைப் போன்று உணர்கிறேன். இதனை உதறமுடியாமல் தவிக்கிறேன். பல நேரங்களில் எனக்கு உடன்பாடு இல்லாத வேலைகளை செய்யவேண்டி இருக்கிறது. நான் இந்த வேலையை உதறிவிட்டு எனக்குப் பிடித்த போட்டோகிராபர் வேலைக்குப் போகலாமா?” என்று கேட்டார்.

”நீ திடீரென போட்டோகிராபராக மாறுவது எளிது. ஆனால், இந்த உடுப்பில் உனக்குக் கிடைக்கும் வருமானம், மதிப்பு போன்றவை புதிய வேலையில் கிடைக்காது என்பதாலே, தயங்கி நிற்கிறாய். போட்டோகிராபராக உன்னால் இதைவிட அதிகம் சம்பாதிக்கவும் முடியும். ஆனால், அதற்கு நீ ரொம்பவே காத்திருக்க வேண்டும்.

இப்போது உன் முன் இருக்கும் எளிதான வழி என்ன தெரியுமா..? எது உனக்கு அமைந்திருக்கிறதோ அதனை உனக்கான வேலையாக ஏற்றுக்கொள்வது மற்றும் மாற்றிக்கொள்வது. உனக்கு வாய்த்த உடல் அமைப்புடன்தான் நீ வாழ்கிறாய். நீ நினைத்த மாதிரி நிறம், பற்கள், புருவம் என எதையும் மாற்றிக்கொள்ள முடியாது. இந்த உடலை எப்படி ஏற்றுக்கொண்டாயோ அதேபோய் இந்த வேலையை ஏற்றுக்கொள்.

இந்த வேலையில் எப்படியெல்லாம் சந்தோஷம் கிடைக்கும் என்று தேடிப் பார். தினமும் நான்கு பேருக்காவது உதவ முடியுமா என்று பார். ஏனென்றால் உனக்கு கிடைத்திருக்கும் பதவி அத்தனை எளிதில் எவருக்கும் கிடைப்பதில்லை. இது எத்தனையோ பேருடைய கனவு வேலை. ஆகவே, கிடைத்த பொக்கிஷத்தை தவற விடாதே. .

பிடித்த வேலை, பிடிக்காத வேலை என்பதெல்லாம் உன் மனதில்தான் உள்ளது. பிடிக்காத வேலையை முழுநேரம் நீ செய்தாலும், உனக்குப் பிடித்த வேலையை பகுதி நேரமாக செய்யலாமே. என்ன வேலை செய்தாலும் அதனை முழு மனதுடன் செய். அப்போது எல்லா வேலையிலும் உனக்கு சந்தோஷமும் திருப்தியும் நிறையவே கிடைக்கும்” என்றார் ஞானகுரு.

மிடுக்குடன் விடைபெற்று சென்றார் அந்த அதிகாரி.


www.gyanaguru.com



# புத்தரின் தத்துவங்கள்

உங்களுக்கு நீங்களே ஒளியாக இருங்கள்.

நிம்மதிக்கு இரண்டே வழிகள். விட்டுக் கொடுங்கள் அல்லது விட்டு விடுங்கள்.

பெரும்பாலான துன்பத்திற்குக் காரணம் நம் கற்பனைகள்.

எல்லோரிடமும் கற்றுக் கொள்ளுங்கள், ஆனால், யார் வழியிலும் செல்லாதீர்கள்.

அச்சம் இருக்கும் வரை அடிமை யாகத்தான் வாழ முடியும்.

வாழ்க்கை எந்த திசையில் செல்ல வேண்டும் என்பதை சரியாக தீர்மானித்து விட்டவரை, தடுக்கும் சக்தி உலகில் எதுவும் இல்லை

உண்மைக்கு மகத்தான சக்தி உண்டு. அதை எவராலும் மாற்றிடவோ மறைத்திடவோ இயலாது.

வாழ்வில் உண்மையும் அன்பும் நிறைந்திருந்தால், எப்போதும் மகிழ்ச்சி நிரம்பியிருக்கும்.

ஒன்றும் தெரியாது என்று நினைப்பவருக்கு கொஞ்சமாவது அறிவு உண்டு. ஆனால், எல்லாம் தெரியும் என்று நினைப்பவர் முழு அறிவிலி.

வாழ்க்கையில் எதுவுமே நிலையானது இல்லை என்பதை உணர ஆரம்பித்து விட்டால். ஆணவம் காணாமல் போய் விடும்.

எதை செய்தாலும் திருப்தியுடன் செய்யுங்கள். அதுவே வாழ்க்கையை அர்த்தம் உள்ளதாக மாற்றும்.

போரில் ஆயிரம் பேரை வெல்வதை காட்டிலும், ஒருவர் மனதை வெற்றி கொள்வதே சிறப்பானது.

# அடுத்தவர் மனைவி கணவன் மீது ஆசையோ ஆசை...

'உசுரே போகுது உசுரே போகுது உதட்ட நீ கொஞ்சம் சுழிக்கயில..' என்று திரைப்படத்தில் திருமணமான ஐஸ்வர்யாராயை பார்த்து திருமணமாகாத விக்ரம் பாடுவதை ஆண்கள் ரொம்பவே ரசிக்கிறார்கள். ஏனென்றால் ஆண்கள் அத்தனை பேருமே அடுத்தவர் மனைவி மீது ஆசைப்படும் ஜொள்ளர்கள்தான்.

திருமணமான பெண் என்றாலும் அவரை தொந்தரவு செய்யாமல் ரசிப்பதில் தவறு எதுவுமில்லை என்கிறார்கள். இது உண்மைதான். பிறருக்குத் துன்பம் தராமல் கிடைக்கும் இன்பம் என்பதாலே மாணவர்கள், இளைஞர்கள் மட்டுமின்றி வயதான ஆண்களும் பெண்களைப் பார்த்ததும் ஜொள்ளுகிறார்கள். எந்த செலவும் இல்லாமல் இலவசமாகக் கிடைக்கும் இன்பம் என்று பெண்களின் உடலை கண்களால் மேய்ந்து ரசிக்கிறார்கள்.

இதில் வயது வித்தியாசம், அறிந்தவர், அறியாதவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்றெல்லாம் எந்த ஆணும் பேதம் பார்ப்பதில்லை. பெண்களை உற்றுப் பார்ப்பதிலும், பெண்கள் பற்றி பேசுவதிலுமே நிறைய ஆண்கள் கிளர்ச்சி அடைகிறார்கள்.

அதேநேரம், பெரும்பாலான ஆண்கள் பார்வையைத் தாண்டி அடுத்த கட்டத்துக்குப் போவதில்லை. இவர்கள் பார்த்து ரசிக்கும் பெண், இவர்களை திரும்பிப் பார்த்தால் அல்லது முறைத்தால் அப்படியே உறைந்துவிடுவார்கள். உடனடியாக அந்த இடத்தைவிட்டு நழுவி விடுவார்கள். இவ்வளவுதான் ஆண்களின் வீரம்.

ஏன் அச்சப்படுகிறார்கள்.

அந்த பெண் ஏதேனும் குற்றம் சாட்டினால் தன்னுடைய குடும்பம், மனைவி, குழந்தை எனும் கட்டமைப்புக்கு சிக்கல் வந்துவிடும் என்று பயப்படுகிறார்கள். ஏனென்றால், குடும்பமே இவர்களுடைய வாழ்க்கை கவசம். அதனால்தான் திருட்டுத்தனமாக மட்டும் பெண்களை ரசிக்கிறார்கள். அதற்காகவே, சம்பந்தப்பட பெண்ணின் பார்வையில் படாமலே எட்ட நின்று தரிசிக்கிறார்கள்.



> பெண் தலை நிமிர்ந்து நிற்கிறாள். மனதில் காதல் வரும்போது, ஆசை வரும்போது அதை மகிழ்ச்சியுடன் வெளிப்படுத்துகிறாள். தனக்கு ஏதேனும் ஆண் மகனைப் பிடித்திருக்கிறது என்றால், அவனுடைய கண்ணை பார்த்து சொல்லும் அளவுக்கு தைரியம் அடைந்துவிட்டாள். இதையும் தாண்டி சில ஆண்களின் சிரிப்பை, உடல்மொழிகளை, பேச்சை ரசித்து மகிழ்கிறார்கள்.



தாங்கள் செய்வது குற்றம் இல்லை என்று நம்பும் அத்தனை ஆண்களும், அதே விஷயத்தை ஒரு பெண் செய்யும்போது அதிர்ச்சி அடைக்கிறார்கள்.

பெண்களுக்கும் ஆண்களை ரசிக்கும் மனப்பான்மை உண்டு. ஆண்களை ரசிப்பதில் பெண்களும் ஆனந்தம் அடைகிறார்கள். இந்த உண்மையை ஆண்கள் நம்புவதில்லை. நம்புவதில்லை என்று சொல்வதைவிட, விரும்புவதில்லை என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால், பெண்ணாய் பிறந்தவர்கள் பிற ஆண்களை ரசிப்பது பாவம் என்றே அவர்களுடைய மூளையில் கற்பிதம் செய்யப்பட்டுள்ளது.

பெண் என்றாலே அவளுக்கு வெட்கம், ரோசம், மானம், அச்சம், பணிவு இருக்க வேண்டும் என்று ஆண்கள் நினைக்கிறார்கள். இதனை நிறைய பெண்கள் கண் மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளவும் செய்கிறார்கள். அதனாலே, பெண்களால் ஆணை திருட்டுத்தனமாக ரசிக்க முடியும் என்பதை ஏற்க யாரும் தயாராக இல்லை.

ஆனால், இப்போது காலம் மாறிவிட்டது. பெண்களுக்குக் கிடைத்திருக்கும் பொருளாதார சுதந்திரம் அவர்களை தைரியமாக்கியுள்ளது. விரும்பியதை செய்ய முன்வருகிறார்கள். திருமணம் முடிப்பது குறித்தும், குழந்தை பெற்றுக்கொள்வது குறித்தும் யோசிக்கிறார்கள். மேலும், தனக்கு கணவன், குழந்தை இருந்தாலும் வேறு ஒரு ஆணை ரசிப்பதில் எந்த தவறும் இல்லை என்றே பெண்ணும் நினைக்கிறாள்.

இப்போது பெண் தலை நிமிர்ந்து நிற்கிறாள். மனதில் காதல் வரும்போது, ஆசை வரும்போது அதை மகிழ்ச்சியுடன் வெளிப்படுத்துகிறாள். தனக்கு ஏதேனும் ஆண் மகனைப் பிடித்திருக்கிறது என்றால், அவனுடைய கண்ணை பார்த்து சொல்லும் அளவுக்கு தைரியம் அடைந்துவிட்டாள். இதையும் தாண்டி சில ஆண்களின் சிரிப்பை, உடல்மொழிகளை, பேச்சை ரசித்து மகிழ்கிறார்கள்.

இதனை, வெறுமனே ஒரு ரசிப்பு என்பதை ஆண்கள் புரிந்துகொள்வதில்லை. பெண் ஒரு பார்வை பார்த்துவிட்டாலே, ஜிவ்வென்று சிவந்து போகிறார்கள். உடல் நடுங்குகிறார்கள். இரவும், பகலும் அந்த பெண்ணை நினைத்து ஏங்குகிறார்கள். தன்னிடம் அந்த பெண் சிக்கிவிட்டாள் என்று அகங்காரம் அடைகிறார்கள். அந்த பெண்ணை எப்படியாவது படுக்கையில் வீழ்த்திவிடத் துடிக்கிறார்கள். அந்த பெண் கள்ளக்காதலுக்குத் தயாராக இருப்பதாக ஆண்களே முடிவு கட்டிவிடுகிறார்கள்.

ஏனென்றால் காதல், காமம் போன்ற விளையாட்டுகளில் ஆண்கள் மூடர்கள். அதன் ஆழமும் அர்த்தமும் அறிய மாட்டார்கள். ஒரு சாதாரண பார்வையின் அர்த்தம் புரியாமல், தன்னுடைய ஆண்மைக்குக் கிடைத்திருக்கும் மதிப்பாக எண்ணி பெருமைப்படுகிறார்கள். இந்த விஷயத்தில் ஆண்கள் நிறையவே மேன்மையுற வேண்டும். பெண்களின் உணர்வுகளை, ரசிப்புகளை புரிந்துகொள்ளும் மனப்பக்குவம் வேண்டும். இதன் அர்த்தம் என்னவென்றால், பெண்களின் ரகசியப் பார்வையை ஆண்கள் புறக்கணிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ஜொள்ளுவிடும் ஆண்களை பார்க்கும் பெண்கள் சிரித்தபடி எப்படி கடந்து செல்கிறார்களோ, அதே மனப்பான்மையுடன் ஆணும் கடந்துசெல்ல வேண்டும்.


பாலின ஈர்ப்பு குற்றம் அல்ல. ஒரு சினிமா நடிகை கிடைத்தால் எத்தனை சந்தோஷமாக இருக்க முடியும் என்று ஆண் ஆசைப்படுவது போலவே, நடிகரைக் கண்டு மகிழ்வதற்கு பெண்ணுக்கும் மனம் இருக்கிறது. நிஜத்தில் சாத்தியமில்லாத ஒன்று மனதளவில் மகிழ்ச்சி தருகிறது என்றால், அதை அனுபவிப்பதில் தவறு இல்லை. இதன் அர்த்தம் சோரம் போவது அல்லது துரோகம் செய்வது அல்ல. இதுவும் ஓர் ஆனந்த மனநிலை. இந்த சின்னச் சின்ன மகிழ்ச்சியில் எந்த தவறும் இல்லை.

அதேநேரம், குடும்பம் என்ற பாதுகாப்பு வளையத்தை ஆணும், பெண்ணும் ஆழமாகப் புரிந்துகொள்ள வேண்டும். விமானங்கள் பறப்பதற்காக வடிவமைக்கப்பட்டவை என்றாலும், தரையில்தான் நிற்க வேண்டும். எனவே கனவுலகத்தில் மகிழ்ந்தாலும், நிஜ வாழ்வுக்குத்தான் அதிக மதிப்பு கொடுக்க வேண்டும்.

வலிமையான குடும்ப அமைப்பே மனிதருக்கு எளிதில் நிம்மதி தரும். சரியான பாதையில் பாதுகாப்புடன் கொண்டுசெல்லும். காதல், காமம் என்பதெல்லாம் வாழ்வில் கொஞ்சநேரம் மட்டுமே. எனவே, சின்னஞ்சிறு சந்தோஷத்துக்காக குடும்ப அமைப்பை உடைத்துக்கொண்டால், மிகப்பெரிய நஷ்டத்தை சந்திக்க வேண்டியிருக்கும். வழக்கம்போல், இதிலும் பெண்களே அதிக காயம் அடைவார்கள்.

எனவே, பெண்கள் இந்த விளையாட்டில் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும். இதன் அர்த்தம் ஆண்களை ரசிக்கக்கூடாது என்பது அல்ல. ஒருவரை பார்ப்பது உயிரை உரசுகிறது, இன்பம் தருகிறது என்றால் மகிழ்ச்சியுடன் பாருங்கள். ஆனால், பார்வையைத் தாண்டிய உறவுக்கும் பேச்சுகளுக்கும் இடம் கொடுத்துவிட வேண்டாம்.

ஏனென்றால், கிடைக்காத ஒன்றே மிகுந்த மகிழ்ச்சி தரும். எட்ட நின்றே ரசியுங்கள். அதுவே மகிழ்ச்சி.



# மம்தா மோகன் தாஸின் நோய் தழும்புகள்





ஆரோக்கியமும் நோயும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள். நோய் இந்த உடலை ஆக்கிரமிக்க முயற்சி செய்வதும், அதிலிருந்து விடுபடுவதற்கு ஆரோக்கியம் போராடுவதும் உடலுக்குள் அன்றாடம் நடைபெறும் நிகழ்வு.

ஒவ்வொரு நோயும் ஒரு வகை. ஒருசில நோய் வருவதும் தெரியாது, போவதும் தெரியாது. சில நோய்கள் வந்துசெல்வதே உடலுக்கு கூடுதல் தெம்பும் வலிமையும் தரும். சில நோய்கள் ஆறாத தழும்புகளைத் தரும்.

ஒருசில நோய்கள் என்றென்றும் கூடவே வரும். நீரிழிவு, மூட்டுவலி, பார்வைக் குறைபாடு போன்றவை காலம் முழுக்கவே உடன் வருபவை. இப்படிப்பட்ட  நோய்களை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

இன்னும் சில நோய்கள் காலம் முழுக்க உடன் இருந்தாலும், நாளுக்கு நாள் அதன் தீவிரம் அதிகரித்துக்கொண்டே இருக்கும். அதன் வலிமை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கும். எத்தனை சிகிச்சைகள் எடுத்துக்கொண்டாலும், அந்த நோயை முற்றிலுமாக தடுத்துவிட முடியாது. இதுபோன்ற தருணங்களில், அந்த நோயைக் கண்டு அஞ்சுவதைவிட, அதன் ஒரு பகுதியாக மாறிவிடுவதே சாலச்சிறந்தது.

அதனை மிகச்சிறப்பாக கையாள்கிறார் நடிகை மம்தா மோகன்தாஸ். அழகுப் பதுமையாக இருந்த நடிகையை, புற்றுநோய் எத்தனை கொடுமையாக சிதைத்தாலும், அதனுடன் அன்போடு போராடுகிறார். ஒருசில விஷயங்களில் நம்மால் எதுவும் செய்ய இயலாது எனும்போது, அதனை அனுபவிப்பதே சரியான வழி.

புற்றுநோய் குறித்து மம்தா என்ன சொல்கிறார் என்று கேளுங்கள்.

கேன்சரிலிருந்து மீண்டு வருதல் என்பது நமது முந்தைய உடல் மற்றும் தோற்றத்துடன் மீண்டு வர முடியாது என்கிற உண்மையுடன் சம்பந்தப்பட்டது. இந்தப் புரிதல் முதலில் வந்துவிட்டால், நோய் நம்மைக் கண்டு பயப்படும். மேலும், நோயுடன் நடத்திய ‘போர்’ குறித்து நான் வெளியே பேச நினைத்தது, அதிலிருந்து முற்றிலுமாக என்னை, என் மனதை விடுவித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே.

இன்னொன்றையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்... கேன்சர் போன்ற நோயால் பாதிக்கப்படும்போது ‘லவ் அண்ட் சிம்பதி’ அதிகமாக நமக்குக் கிடைக்கிறது. இதில் ‘சிம்பதி’ அதிகமானால் அது நோயைவிட அதிகமான ஆபத்தை நம் மனதில் உருவாக்கிவிடும். எனவே, அப்படியொரு சிம்பதி எனக்கு வேண்டாம் என்பதற்காகவே சிகிச்சை எடுத்துக்கொண்ட 6 வருடங்கள் கேரளத்திலிருந்து சென்னை வந்து, இங்குள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். திரையுலகிலிருந்தும் விலகியிருந்தேன்

புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த நான் தற்போது விட்டிலிகோ என்ற நிறமிழப்பை உண்டாக்கும் நோயால் பாதிக்கப்பட்டுள்ளேன். இது புற்றுநோயின் ஒரு பகுதி என தெரியும் என்று கூறியிருக்கிறார்.

இந்த புதிய நோயின் வரவு குறித்து அவர் தனது இன்ஸ்டாவில் சூரியனுக்கு ஒரு வேண்டுகோள் வைத்திருக்கிறார். ‘என்னுடைய நிறத்தை இழந்து கொண்டிருக்கிறேன். நீங்கள் காணும் கதிரை என்னுடைய மூடுபனி வழியாக காண ஒவ்வொரு நாளும் எழுகிறேன். உங்களிடம் உள்ளவற்றை கொடுங்கள். அந்த அருளுக்கு என்றென்றும் கடன் பட்டவளாக இருப்பேன்’ என்று கூறியிருக்கிறார்.

இந்த நோயினை தடுக்க முடியாது, தள்ளிப்போட மட்டுமே முடியும் என்பதால், சூரியனுடன் உரையாடுகிறார் மம்தா.

இப்படி ஒரு நிலை எல்லா மனிதருக்கும் வரவே செய்யும். அப்போது உறுதியுடன் நோயை எதிர்கொள்வதே மகிழ்ச்சி.



www.gyanaguru.com



ஞானகுரு தரிசனம்

# குற்றால குரங்குகள் எல்லாமே சித்தர்கள்..?

ஜாதி மோதலில் ஒரு கொலை செய்துவிட்டு குற்றாலம் மலையில் ஒளிந்து கொண்டிருந்த பாலுச்சாமியுடன் பேசிக்கொண்டி ருந்தார் ஞானகுரு. அந்த நேரத்தில் இட்லி வாங்கிக்கொண்டு திரும்பிவந்த வைத்தியநாதனுடன் விளையாட நினைத்தார் ஞானகுரு.

‘‘அவன் போலீஸ்காரன்... அவனை உடனே கொன்றுவிட்டு தப்பிச்செல்...’ என்றதும் சட்டென கத்தியை எடுத்தான் பாலுச்சாமி. வைத்தியநாதன் பயந்து நடுங்குவதைப் பார்த்ததும், இது ஞானகுருவின் விளையாட்டு என்பதை சட்டென புரிந்துகொண்டான்.

“சாமி... ஏன் பொய் சொல்றீங்க... பாவம் சின்னப் பையனா இருக்கான், நான் யோசிக்காம எதையாவது செஞ்சுடப்போறேன். அவன் உங்க சிஷ்யனா?” என்று கேட்டான். முகம் வெளுத்துப்போயிருந்த வைத்திய நாதனை அழைத்து அருகே அமர வைத்த ந்பாலுச்சாமி, “பயப்படாத, நான் ஒண்ணும் செய்ய மாட்டேன்” என்று சமாதானப் படுத்தியபடி, கத்தியை இடுப்புக்குள் செருகிக் கொண்டான்.

“ஆமாம் வைத்தியநாதா... இவர் மிகவும் நல்லவர். இரண்டே இரண்டு நபர்களை மட்டும்தான் கொலை செய்திருக்கிறார்’’ என்று ஞானகுரு சொன்னதும் அதிர்ந்தான் வைத்தி.

‘‘கலிகாலத்துல இப்படித்தான் நிறைய பேர் கொலைவெறியோட திரிவாங்கன்னு கதாகலேட்சபத்துல கேட்டிருக்கேன்...” என்று முனகினான் வைத்தியநாதன்.

“அப்படின்னா கிருதயுகம், திரேதயுகம், துவாபர யுகங்களில் தேனும், பாலும் ஓடியதா... சாதாரண பொதுமக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்களா?”

“ஆமா சாமி... அந்த யுகங்களில் எல்லாம் தர்மம் மட்டுமே இருந்ததாம், அதனால் மக்கள் சந்தோஷமாக இருந்திருக்கிறார்கள். கலிகாலம் பிறந்தபின்பே அதர்மம் தலை தூக்கிவிட்டது” என்றான்.

‘‘வைத்தியநாதா... மனிதர்கள் உருவான காலத்திலிருந்து துன்பத்தில்தான் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் இன்றைய நிலையை விட, முந்தைய காலத்தில் மனிதர்கள் வாழ்வு மிகவும் மோசமாகத்தான் இருந்தது. நரமாமிசம், பாதுகாப்பு இன்மை, மனித அடிமைகள், வர்ணபேத கொடூரங்கள், பெண்ணடிமை போன்றவை இந்த யுகங்களில்தான் குறைந்திருக்கிறது.”

“என்ன சாமி... இப்படிச் சொல்றீங்க, பெரியவங்க சும்மாவா சொல்லி வைச்சிருப்பாங்க... அவங்க சொன்னதை சந்தேகப்பட்டா நரகம்தான்...” என்றான் ஆதங்கத்துடன்.

ஞானகுரு
# மகிழ்ச்சி
டிஜிட்டல் மாத இதழ்
2 - 11

நிறுவனர்
**எஸ்.கே.முருகன்**

ஆசிரியர்
**எம்.நிர்மல்**

வெளியீட்டாளர்
**எம்.நிலா**

வடிவமைப்பு
**வி.கிராபிக்ஸ்**
**கே.எம்.பிரசன்னா**

நிர்வாக இயக்குனர்
**அரசு கிருத்திகா**

முதன்மை செயல் அலுவலர்
**மணியன் கலியமூர்த்தி**

ஒருங்கிணைப்பாளர்
**ரத்தினபாண்டியன்**

**ஞானகுரு பப்ளிகேஷன் மூலம் மகிழ்ச்சி இதழ் வெளியிடப்படுகிறது. அலுவலக முகவரி :**

ஜி2, கோவிந்த் அபார்ட்மென்ட்,
6, ஏஜிஎஸ் காலனி 4வது தெரு,
கொட்டிவாக்கம், சென்னை - 41.
**தொடர்புக்கு:** +91 98409 03586, 72997 53999, 98844 53014
**இ.மெயில் :** skmnila1@gmail.com
**இணையதளம் :** gyanaguru.com

“பெரியவங்க சொன்னதெல்லாம் வேதவாக்கு என்று கேள்வி கேட்காமல் ஏற்றுக்கொள்ளும் உன்னைப் போன்ற மனிதர்கள் இருப்பதால்தான், ஆன்மிக விற்பனை படுஜோராக நடக்கிறது” என்று ஞானகுரு முடிப்பதற்குள், “சாமி... எனக்கு ஒரு பதில் சொல்லுங்க...” என்று இடையில் புகுந்தான் பாலுச்சாமி.

ஏழ்மை, பசி என்றால் என்னவென்று அறியாமல் இறைவனை தேடும் அப்பாவி ஒருவன். வறுமை மற்றும் ஜாதிக் கொடுமையால் துரத்தப்பட்டு, மரணத்தின் தூண்டிலில் சிக்கியிருக்கும் மற்றொருவன் என இருவரையும் ஒரு சேர பார்த்தார் ஞானகுரு.

“இந்த நேரம் நீ விரும்புவது என்ன?” பாலுச்சாமியிடம் கேட்டார்.

“சாமி... கூட்டமா ஆட்கள் என் கூட இருந்த தைரியத்துல தப்பு பண்ணிட்டேன். ஆனா, என்னால நிம்மதியா தூங்க முடியலை. காலத்தைக் கொஞ்சம் திருப்பிப் போட்டு அந்த கொலையைத் தவிர்க்க ஆசைப்படுறேன். அது முடியாதுன்னு தெரியும், ஆனா, எப்படியாவது இந்த பிரச்னையில இருந்து விடுதலை கிடைச்சுட்டா நிம்மதியா இருக்கும்...” என்றான்.

“இரண்டு குடும்பத்தின் சிரிப்பை முழுமையாகப் புடுங்கி எறிந்துவிட்டு, நீ நிம்மதிக்கு ஆசைப்படுவது நியாயமா?” குரல் உயர்த்தினார். அந்த கேள்வியின் தீவிரத்தில் சட்டென உறைந்தான்.

“திட்டம் போட்டு எதுவும் செய்யலையே சாமி... இப்போ தப்பிச்சு ஓடிவந்து, இந்த மலையில அனாதையா திரியும்போது, ஒரு மிருகம் போல நடந்துக்கிட்டதை நினைச்சு வருத்தப்படுறேன்” என்றான்.

“மிருகங்களை அவமானப்படுத்தாதே பாலுச்சாமி. பசித்தால் மட்டுமே அவை பிற உயிர்களைக் கொல்லும். அவமானத்திற்காக அல்லது கும்பல் தைரியத்தாலோ பிற உயிர்களைக் கொல்லாது. உன்னால் பாதிக்கப்பட்ட இரண்டு குடும்பத்தினரையும் நீ வன்முறை பாதைக்குத் திருப்பி விட்டாய்...”

“என்ன சொல்றீங்க சாமி, அவங்க என்ன செஞ்சாலும் பொறுத்துப் போகணுமா? அவமானத்துடன் வாழணுமா?”

“அப்படியென்றால் நீ இருவரை வெட்டிப் போட்டதும் இந்த உலகம் மாறிவிட்டதா? இனி யாரும், யாரையும் அவமானப்படுத்தவே மாட்டார்களா? உன் ஆசைப்படி ஐ.ஏ.எஸ். படித்து ஜெயித்துக் காட்டியிருக்க வேண்டும். அவமானங்களை காக்கை எச்சம் போன்று துடைத்து எறிந்திருக்க வேண்டும். அம்பேத்கர் உள்ளிட்டவர்கள் அப்படித்தானே ஜெயித்தார்கள். அவர் படாத அவமானமா..? ஆனால் நீ சங்கமும் தோழமை வட்டாரமும் கை கொடுத்ததும் பாதை மாறி விட்டாய். நீ செய்த காரியத்தால் லாபமடைந்தது, உன்னுடைய சங்கம் மட்டுமே”

“அப்படின்னா சங்கம் தப்புன்னு சொல்றீங்களா?”

“அப்பனே... எல்லா சங்கங்களும் நல்ல நோக்கத்திற் காகவே ஆரம்பமாகின்றது, ஆனால் எந்த சங்கமும் அதன் நோக்கத்தில் இதுவரை வெற்றி பெற்றதில்லை, இனியும் வெற்றி பெற முடியாது”

“இதெல்லாம் இப்போதானே தெரியுது... எங்களுக்கு இதை எடுத்துச் சொல்ல யாருமே இல்லையே..?”

“கற்றுத் தருவதற்கு எத்தனையோ குருக்கள் இந்த உலகில் இருக்கிறார்கள் பாலுச்சாமி. ஆனால் மனிதன்தான் கற்றுக் கொள்வதில்லை. தன்னை வெட்டுபவர்களுக்குக் கூட உபகாரமாக தங்கத்தையும் தண்ணீரையும் தரும் பூமியிடமிருந்து பொறுமையையும் மன்னிப்பையும் கற்றுக் கொள்ளலாம். நல்லவர், தீயவர் என்ற பாகுபாடு பார்க்காமல் எல்லோரையும் சமநிலையில் பார்க்கும் மனப்பான்மையை மழையிடம் இருந்து





கற்றுக் கொள்ளலாம்.

எதையும் தனக்கென்று வைத்துக் கொள்ளாமல் வாழும் பற்றற்ற தன்மையை மரங்களிடமிருந்து அறியலாம். சேகரித்து வைப்பதால் துன்பம்தான் உண்டாகும் என்பதை தேனீக்களிடம் இருந்தும், நாவை அடக்காவிட்டால் மாட்டிக் கொள்வோம் என்பதை தூண்டில் மீன்களிடம் இருந்தும் தெரிந்து கொள்ளலாம். கவலை இல்லாமல் மகிழ்ச்சியுடன் வாழும் கலையை குழந்தைகளிடம் இருந்து கற்றுக் கொள்ளலாம்.”

பாலுச்சாமியும் வைத்தியநாதனும் வாய் மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

“மனிதர்கள் தானாகவே கற்றுக் கொள்ள வேண்டும், இதுவரை இல்லை என்றாலும் இனியாவது அறிந்து கொள். நீ என்ன செய்யப் போகிறாய் என்று தெளிவாக முடிவெடு. போலீஸ்காரர்கள் உன்னை கடமைக்குத்தான் தேடுவார்கள். ஆனால் உன்னால் கொலை செய்யப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள், பழி வாங்க ஆத்திரத்துடன் தேடிக்கொண்டு இருப்பார்கள். அவர்களையும் கொலைகாரர்களாக மாற்றிவிடாதே...” என்றேன்.

“நான் போலீஸ்ல போய் சரண் அடைஞ்சாலும், ஜாமீன்ல வரும்போது அல்லது விடுதலையாகும்போது, என்னய அவங்க கொல்றதுக்கு வாய்ப்பு இருக்கே சாமி...” என்றான் பாலுச்சாமி.

“மரணம் எங்கே எப்போது காத்திருக்கும் என்பதை எவரும் அறிய முடியாது. இதோ இப்போதுகூட சில பாறைகள் உருண்டு விழுந்து நாம் மரணமடையலாம்! உன்னால் பாதிக்கப்பட்டவர்களிடம் மானசீகமாக அல்லது நேரில் சென்று மன்னிப்புக் கேள். அவர்கள் உன்னை மீண்டும் அவமானம் செய்தாலும், கொலை செய்ய முயன்றாலும் எதிர்ப்பைக் காட்டாதே. காலில் விழுந்தவர் கழுத்தை அறுக்கும் அளவுக்கு மனிதர்கள் இன்னமும் மாறவில்லை.... கிளம்பு” என்றதும் ஓரளவு தெளிவானான் பாலுச்சாமி.

பெருமூச்சு விட்டபடி, “சாமி... ஏதோ ஒரு பயம் நெஞ்சுக்குள்ளே அரிச்சுக்கிட்டே இருந்திச்சு, இப்போ பரவாயில்லை...” என்றபடி காலைத் தொட குனிந்தான்.

அவன் கையைப் பிடித்து தடுத்து நிறுத்தினார் ஞானகுரு. “பாலுச்சாமி... யார் காலிலும் விழாதே... யாரையும் உன் காலில் விழ வைக்காதே. உன்னுடைய செயலுக்காக இந்த உலகம் கொடூரமாக தண்டிக்கலாம்... ஆனால், கடைசிவரை நம்பிக்கையை இழக்காதே. ஏதாவது ஒன்றை கெட்டியாகப் பிடித்துக் கொள். உனக்கு படிப்பு நன்றாக வரும் என்றால் அதில் ஆழமாக இறங்கு... அன்புமயமாக மாறு. திரும்பிப் பார்க்காமல் நட!” என்று தலையைத் தடவிக் கொடுத்ததும், வேகவேகமாக மலையில் இருந்து கீழே இறங்கி காணாமல் போனான்.

## மந்திரச்சொல்

ஆயிரம் யோசனைகள் முக்கியமல்ல, ஒரே ஒரு செயல் பெருமதிப்பு கொடுத்துவிடும்.


www.gyanaguru.com

“அங்கே இருக்கிறது வேற குரங்குக...” என்று சொல்லவந்தவன் அப்படியே நிறுத்தி, “மன்னிச்சுடுங்க சாமி” என்று பொட்டலங்களைப் பிரித்து வைத்தான். உடனே அக்கம் பக்கம் இருந்த குரங்குகள் அவற்றை பாய்ந்து எடுத்தன. அவற்றுடன் போட்டி போட்டு ஞானகுருவும் ஒரு இட்லி எடுப்பதைக் கண்டு முகம் சுளித்தான் வைத்தியநாதன்.





# குற்றால குரங்குகள் எல்லாமே சித்தர்கள்..?

நடப்பதை எல்லாம் பார்த்துக்கொண்டு இருந்த வைத்தியநாதன், “சாமி... அவன் போலீஸ் ஸ்டேஷன் போகாமல் தப்பித்துப் போய்விட்டால்..?’’ என்று சந்தேகம் கேட்டான்.

“அவன் கதை நமக்கெதுக்கு வைத்தியநாதா... என்ன வாங்கிவந்தாய்?” என்று கேட்டதும், சட்டையைத் தூக்கி மடியில் கட்டியிருந்த இரண்டு இட்லி பொட்டலங்களை எடுத்துக் கொடுத்தான்.

“ஏன்... இப்படி மறைத்து எடுத்துவந்தாய்?”

“இல்லேன்னா... வர்றவழியில குரங்குக புடுங்கிடும் சாமி...”

‘‘குரங்குகளுக்காக வாங்கியதை, அதற்கே கொடுப்பதில் உனக்கென்ன வருத்தம்?”

‘‘அங்கே இருக்கிறது வேற குரங்குக...’’ என்று சொல்லவந்தவன் அப்படியே நிறுத்தி, “மன்னிச்சுடுங்க சாமி” என்று பொட்டலங்களைப் பிரித்து வைத்தான். உடனே அக்கம் பக்கம் இருந்த குரங்குகள் அவற்றை பாய்ந்து எடுத்தன. அவற்றுடன் போட்டி போட்டு ஞானகுருவும் ஒரு இட்லி எடுப்பதைக் கண்டு முகம் சுளித்தான் வைத்தியநாதன்.

‘‘சாமி... குற்றாலத்துல சித்தர்கள்தான் மரமா இருக்கிறதா சொல்றாங்களே உண்மையா?” கேள்வியை வீசினார்.

‘’ஆமாம் சாமி... ராத்திரி நேரங்களில் மரங்கள் எல்லாம் நடக்குமாம், பேசுமாம், சித்ரா பௌர்ணமிக்கு எல்லா சித்தர்களும் அருவிக்கரையில் கூடி பூஜை செய்வார்களாம்?” என்று ஆர்வமாகச் சொன்னான்.

‘‘ஏன் அத்துடன் நிறுத்திக் கொண்டாய்... சித்தர்கள்தான் குரங்கு உருவத்திலும் திரிகிறார்கள் தெரியுமா?’’ என்றார். உடனே ஆத்திரமானான் வைத்தியநாதன்.

‘‘சாமி... சித்தர்கள் எல்லாமே தெய்வத்துக்குச் சமமானவங்க, அவங்களைப் போய் குரங்குன்னு சொல்றீங்க...” என்று ஆத்திரப்பட்டான்.

‘‘என்னப்பா... ஒருயிராக இருக்கும் மரத்தை சித்தர்கள் என்றால் சந்தோஷப்படும் நீ, ஐந்தறிவு படைத்த குரங்கை சொன்னால் கோபப்படுகிறாய். இந்த உலகில் இருக்கும் எல்லா உயிர்களும் ஒன்றுதான், எந்த உயிரையும் விட எதுவும் தாழ்ந்தவை அல்ல, உயர்ந்தவையும் அல்ல. கிளம்பலாம் வா...” என்றபடி நடக்கத் தொடங்கினார்.

பின்னாலே வந்த வைத்தியநாதன்,

“சாமி... நான் பூசாரியாக ஆசைப்படுறது தப்பா?” என்று கேட்டான்.

“மணல் வீடு கட்டி விளையாடும் குழந்தை, அந்த வீட்டிலேயே வசிப்பேன் என்று ஆசைப்பட்டால் என்ன சொல்வாய்?”

ஞானகுருவுக்கு பதில் சொல்லாமல் அமைதியாக நடந்தான் வைத்தி. அதனால், “ஒரு பூசாரியின் வேலையின் ஆழமும் அர்த்தமும் தெரியுமா?” என்று கேட்டார்

‘‘கடவுளுக்கு சேவை செய்வது மட்டும்தான்’’ என்று ஆர்வமாகச் சொன்னான்.

“தப்பு வைத்தியநாதா... மனிதர்களை கடவுளுக்கு அருகே அழைத்துச் செல்வதுதான் ஒரு பூசாரியின் வேலை. மாணவனுக்கு எழுத்துக்களை அறிமுகப்படுத்தும் ஆசிரியரைப் போன்று கடவுளைக் காட்ட வேண்டும். ஆனால் உன்னுடைய விருப்பமோ வேறு மாதிரி இருக்கிறது. எப்போதும் கடவுளுடன் இருக்க ஆசைப்படுபவன் பூசாரியாகக் கூடாது, துறவியாகத்தான் மாறவேண்டும். தாய், தந்தை, கோயில், கடவுள் என எந்த பற்றும் இல்லாத துறவியாக மாற வேண்டும். அனைத்தையும் விட்டுவிட தயாராக இருக்கிறாயா?” சிரித்தபடி கேட்டார்.

‘‘அதெல்லாம் வேண்டாம் சாமி... உங்களைப் போல குரங்குக்கு வைச்சதை எடுத்து என்னால சாப்பிட முடியாது. அம்மா அப்பா கூடவே இருந்துக்கிட்டு பூசாரியா இருந்துக்கிறேன். உங்களால அப்பாவை சரிக்கட்ட முடியாட்டியும் பரவாயில்லை, நானே பார்த்துக்கிறேன்” என்றான்.

இவனை அறிவுபூர்வமாகப் பேசி சரிக்கட்ட முடியாது என்று புரிந்த ஞானகுரு, உணர்வுபூர்வமான ஆயுதத்தைக் கையில் எடுத்தார்.

“உன் அப்பாவுக்கு விரைவில் மரணம் வரப்போகிறது என்பது தெரியுமா?” என்று சொல்லிவிட்டு வேகமாக நடந்தார். அதே இடத்தில் சிலை போல் அதிர்ந்து நின்றான் வைத்தியநாதன்.








Click the book to read the magazine

மகிழ்ச்சிக்கு மொழி ஒரு தடையில்லை. புதிய முயற்சியாக ஆங்கிலத்திலும் மலர்கிறது ஞானகுரு மகிழ்ச்சி. எளிய மொழியில் எல்லோருக்கும் கிடைக்கட்டும் மகிழ்ச்சி.

happiness only real when shared

# காட்டுத்தனமான காதலுக்கு நோ



“விரட்டி விரட்டி காதலித்தால் எந்த பெண்ணும் விழுந்துவிடுவாள் என்பதுதான் ஆண்களின் ஜீன்களில் அழுத்தமாக எழுதப்பட்டிருக்கும் சங்கேத வார்த்தை. அதேபோல், அழகாக இருக்கிறாய் என்று புகழ்ந்துகொண்டே இருந்தாலும், அந்த புகழ்ச்சிக்கு பெண் அடிமையாகிவிடுகிறார்கள்.

பொதுவாக ஆண்களின் அகராதியில் பெண்ணை அடைவது என்பது, காலம் முழுவதும் வைத்து காப்பாற்றும் பொறுப்பை எடுத்துக்கொள்வது அல்ல. ஒரே ஒரு முறை அந்த பெண்ணை அனுபவித்துவிட்டு, கழட்டிவிடுவது அல்லது தன் அடிமையாக வைத்திருப்பது மட்டுமே. இதற்காகவே ஆண்கள் காதல் முகமூடி அணிந்து வருகிறார்கள். இப்படிப்பட்ட சுயநல ஆண்களிடமிருந்து பெண்கள் எச்சரிக்கையாக விலகுதல் வேண்டும்…” என்று கல்லூரி மாணவிகளுக்கு பாடம் எடுத்தார் ஞானகுரு.

”என்னை காதலிக்கும் ஒருவன் இப்படித்தான் விரட்டி விரட்டி காதலித்தான். இப்போதும் காதலிக்கிறானே…” என்று சந்தேகம் கேட்டாள் மாணவி.

”அவனுடைய தேவை இன்னமும் பூர்த்தியாகவில்லை என்பதுதான் அர்த்தம். பெண்ணை மிரட்டியும், விரட்டியும், கெஞ்சியும் காதல் செய்பவர்களுக்கு காதலின் அர்த்தம் தெரியாது…. உண்மையான காதலனுக்கு என்று சில அளவுகோல் இருக்கிறது. இதில் உன் காதலனை எடை போட்டுக்கொள்…” என்றார் ஞானகுரு.

### ஞானகுருவின் காதல் அளவுகோல்

- கூப்பிட்ட நேரத்துக்கு எல்லாம் அலாரம் வைத்ததுபோல் ஒருவன் வந்து நிற்கிறானா? நிச்சயம அவன் இயல்பான மனிதன் இல்லை. எப்படியும் பெண்ணை வளைக்க வேண்டும் என்று நினைப்பவர்கள்தான், சொன்ன நேரத்துக்கு முன்னரே வந்து காத்திருந்து பில்டப் கொடுப்பார்கள்.

- சாதாரண உடை உடுத்தியிருந்தாலும், அளவுக்கு மீறி அழகைப் புகழ்கிறானா… இந்தக் காலத்திலும் கவிதை எழுதிக் கொண்டுவந்து படிக்கிறானா, அவனுடைய வருமானத்திற்கு மீறி செலவழிக்கிறானா… அவனுக்கு காதல் பற்றி எதுவுமே தெரியவில்லை, உடனே அவனிடமிருந்து விலகிவிடுங்கள். இயல்பாக பேசவும் பழகவும் வாழவும் தெரிவதுதான் காதலின் பண்புகள்.

- எங்க அம்மாவுக்குப் பிறகு உன்னைப் பார்க்கும்போது மட்டும்தான் எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. என் மீது யாருமே அன்பு செலுத்துவது இல்லை. எனக்கு நண்பர்களே இல்லை என்ற ரீதியில் யாராவது சொன்னால் நம்பவே நம்பாதீர்கள். அவன் ஒரு ஃப்ராடு.

- நண்பன் அல்லது உறவினருடன் காதலன் நிற்கும்போது நீங்கள் பார்த்துவிட்டால், உடனே கூப்பிட்டு அறிமுகம் செய்து வைக்கிறானா அல்லது கண்டுகொள்ளாமல் போகும்படி சொல்கிறானா என்று பாருங்கள். தைரியமாக அறிமுகம் செய்கிறான் என்றால் அவன் தேறுவான். ஏதாவது காரணம் சொல்லி நழுவுபவன் ஏமாற்றுக்காரன்.

- நீ என்னை காதலிக்கவில்லை என்றால் செத்துவிடுவேன் என்று சொல்கிறானா? உடனே அவனைவிட்டு விலக வேண்டியது அவசியம். அவன் ஒரு முட்டாள். இன்று செத்துவிடுவேன் என்று சொல்பவன், நாளை நீ கிடைக்காவிட்டால் கொலை செய்வேன் என்று சொல்வான். அதனால் உடனே கத்தரித்துவிடவும்.

- சம்பளம் எவ்வளவு, எப்போது புரமோசன் கிடைக்கும், எவ்வளவு கடன் இருக்கிறது என்பதை எல்லாம் இயல்பாக சொல்கிறானா அல்லது கதை விடுகிறானா என்று பாருங்கள். ஏதேனும் ஒரு வகையில் கிராஸ்செக் செய்து உண்மையைக் கண்டுபிடியுங்கள். நிறைய சொத்து இருக்கிறது, பெரிய சம்பளம் என்று ஏமாற்றுபவனை உடனே விலக்குங்கள்.

- கல்யாணம் பற்றி பேச்சை அவனே எடுக்கிறானா என்பதைக் கவனியுங்கள். நீங்கள் கல்யாணம் பற்றி பேசத் தொடங்கியும் அவன் கண்டுகொள்ளவில்லை என்றால் உஷாராகுங்கள். கோயிலில் தாலி கட்டிக்கொள்வோம், ஊரைவிட்டு ஓடுவோம் என்ற ரீதியில் பேசினால் நீங்கள் அவனைவிட்டு ஓடும் நேரம் வந்துவிட்டது என்று புரிந்துகொள்ளுங்கள்.

- தினமும் ஒரே பைக், ஒரே மாதிரி ஆடைகள், ஒரே மாதிரி செலவழிக்கிறானா என்பதைப் பாருங்கள். கவரவேண்டும் என்பதற்காக விதவிதமாக நண்பர்களிடம் பைக் வாங்கி வருபவன், விதவிதமான ஆடை உடுத்தி வருபவன் நிச்சயம் கல்யாணம் வரை வரமாட்டான்.

பெண்ணை அனுபவித்துவிட்டு, அவளிடம் இருக்கும் பணத்தில் ஜாலியாக பொழுதை போக்க வேண்டும் என்றே நிறைய ஆண்கள் அலைகிறார்கள். காதல் என்ற பெயரில் இப்படிப்பட்ட ஆண்களின் வலையில் விழுந்துவிடாதீர்கள். உண்மையான காதலன் வரும்வரை காத்திருங்கள். இல்லையென்றால் கணவனை காதலியுங்கள்.



www.gyanaguru.com






# மகிழ்ச்சிக்கு ரூ.500/-

ஞானகுரு மகிழ்ச்சி மின்னிதழுக்கு ஒவ்வொரு மாதமும் விமர்சனங்கள், பாராட்டுகள் அதிகரித்து வருவது, மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. மக்களிடம் மகிழ்ச்சி, அன்பு, நிம்மதி, ஆறுதல் போன்ற வற்றை பரப்பு வதையே ஞானகுரு மகிழ்ச்சி இதழ் நோக்கமாகக் கொண்டுள்ளது. வணிக நோக்கமற்று வெளியிடப்படும் இந்த மின்னிதழ் மற்றும் ஞானகுரு இணையதளம் (gyanaguru.com) இயங்குவதற்கு உங்களால் உதவ இயலும்.

இந்த மின்னிதழை உங்களுக்குத் தெரிந்த அனைவருக்கும், மற்ற குழுவினருக்கும் பகிர்ந்து, அவர்களையும் மற்றவர்களுக்கு பகிரச் செய்யுங்கள். இதுதவிர, மின்னிதழுக்கு ஆண்டு சந்தா 500 ரூபாய் என்று முடிவு செய்யப் பட்டுள்ளது. அதேநேரம், இதனை சந்தா கொடுப்பவர்கள் மட்டுமே படிக்க இயலும் வகையில் கட்டமைக்கவில்லை என்பதால், எப்போதும் போல் எல்லோரும் ஞானகுரு மகிழ்ச்சி இதழை படிக்கவும், பரப்பவும் முடியும். எனவே, விருப்பம் உள்ளவர்கள் கீழ்க்கண்ட அலைபேசி எண்ணுக்கு அல்லது வங்கிக் கணக்கிற்கு ஆண்டு சந்தா 500 ரூபாய் அனுப்பிவையுங்கள். பணம் அனுப்பியவர்கள், தங்கள் பெயர், முகவரியை கீழ்க்கண்ட செல்போன் எண்ணுக்கு வாட்ஸ் ஆப் மூலம் அனுப்ப வேண்டுகிறோம். இது, மகிழ்ச்சிக்கு அதிக மகிழ்ச்சி தரும்.

சந்தா செலுத்துபவர்கள் ஞானகுரு ஆறுதல் மையத் தில் உறுப்பினராக முடியும். குறிப்பிட்ட எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இணைந்ததும், ஆறுதல் மையம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளிவரும்.

நன்றி.

**GPAY : +91 72997 53999**

# ஞானகுரு பதில்கள்



**? இத்தனை ஆய்வுகள் செய்தும் மனிதர்களால் புதிதாக எந்த ஒரு உயிரையும் உருவாக்க முடியவில்லை. அப்படியென்றால், உயிர்களை உருவாக்கியது கடவுள்தானே..?**

**- எம்.கதிரேசன், சென்னை.**

**ஞானகுரு :**

உயிர்களை உருவாக்க நீங்கள் ரொம்பவும் சிரமப்பட அவசியம் இல்லை. வீட்டில் மீந்துபோன ரொட்டி அல்லது வடையை கிச்சனில் ஏதாவது ஒரு மூலையில் ஒளித்துவையுங்கள். சில நாட்களில் அதில் பூஞ்சை பிடிக்கும், கருப்பாக மாறும். பின்னர் அதிலிருந்து புழுக்கள், பூச்சிகள் வருவதை காணமுடியும். கிச்சனில் இருந்த ரொட்டியில் இருந்து புழுக்களையும், பூச்சிகளையும் உருவாக்கும் நீங்களும் கடவுள்தானா...? இயற்கையின் ஆற்றலை இன்னமும் மனிதரால் கண்டறியமுடியவில்லை என்பதே உண்மை.

**? நல்ல கணவராக வாழ்வது எப்படி?**

**- எஸ்.சுந்தரபாண்டியன், சாயல்குடி.**

**ஞானகுரு :**

மனைவியின் சந்தோஷம், வெற்றி, நிம்மதி ஆகியற்றுக்கு குறுக்கே நிற்காதவரே நல்ல கணவன். மனைவிக்கு சுதந்திரம் கொடுப்பவர் இல்லை, மனைவியின் சுதந்திரத்திற்கு பிறரால் ஆபத்து வராமல் காவலுக்கு நிற்பவரே, நல்ல துணை.



**? மனிதநேயம் இன்றும் இருக்கிறதா...?**

**- கே.முத்துமாரி, காரைக்கால்**

**ஞானகுரு :**

கடவுள் இருக்கிறாரோ இல்லையோ, கோயிலுக்கு வெளியே பிச்சைக்காரர்கள் நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்கள் என்று பாருங்கள். இவர்கள் எண்ணிக்கையைப் பார்த்த பிறகுமா மனிதநேயத்தில் நம்பிக்கை வரவில்லை.

**? வாழ்வின் பிரதானம் பணமா அல்லது நல்ல மனமா?**

**- எஸ்.ராஜசேகர், முத்தையாபுரம்.**

**ஞானகுரு :**

நிறைய பணம் வேண்டும் என்று இறைவனை கேட்கும் யாருமே நல்ல மனம் வேண்டும் என்று கேட்பதில்லை. ஏனென்றால், ஒவ்வொரு நபரும் தன்னுடைய மனதை உயர்வான ஒன்றாகவே நினைக்கிறார்கள். அதனால்தான், இதைவிட நல்ல மனம் வேண்டும் என்று விரும்புவதில்லை. உண்மையில் வாழ்வின் பிரதானம் என்றால், முதலில் ஆரோக்கியமான உடல். அடுத்தது நல்ல மனம். மூன்றாவதாக வருகிறது பணம். இந்த மூன்றும் இல்லையென்றால் வாழ்வு நிறைவடையாது.







**? கௌரவம் என்பது புகழ் சம்பந்தப்பட்டதா..?**

**- எம்.முருகன், நெய்வேலி**

**ஞானகுரு :**

கௌரவம் வெங்காயம் போன்றது. அதாவது உரிக்க உரிக்க ஒன்றுமே மிஞ்சாது. சட்டையில் சாக்கடை பட்டாலே தங்கள் கௌரவம் போய்விடும் என்று எண்ணும் மனிதர்களுக்கு மத்தியில்தான், சாக்கடைக்குள் மூழ்கி எழுந்து பிழைப்பு நடத்துபவர்களும் இருக்கிறார்கள். கௌரவம் என்பதற்கான வரையறை மனிதருக்கு மனிதர், நேரத்திற்கு நேரம் மாறிக்கொண்டே இருக்கும். பொன்னால், புகழால், அழகால், பிறப்பால் கிடைக்கும் கௌரவம் ஒருபோதும் நிலைத்து நிற்பதில்லை. ஆப்பிரிக்காவின் செல்வாக்கான நடிகராக இருந்தாலும், உங்கள் ஊருக்கு வந்து நின்றால், அவரை ஒரு சாதாரண அந்நியனாக பார்ப்பீர்களே தவிர, புகழ்பெற்ற கலைஞராக அல்ல. எனவே, கௌரவத்தை நம்பி ஏமாறாதீர்கள்.

**? தமிழ்வழிக் கல்வியைவிட ஆங்கில வழிக் கல்வி சிறந்ததா?**

**- பி.சகுந்தலா பொன்ராஜ், சாத்தூர்.**

**ஞானகுரு :**

ஹிந்தி மொழி தெரிந்தால் இந்தியா முழுவதும் போய் வேலை செய்ய முடியும், ஹிந்தி கற்காத காரணத்தால் தமிழன் அத்தனை வேலை வாய்ப்புகளையும் இழப்பதாக முன்பு சொன்னார்கள். இன்று தமிழகம் முழுவதும் வேலைக்கு வந்திருக்கும் அடிமட்டத் தொழிலாளர்கள் அனைவரும் ஹிந்தி பேசுபவர்கள்தான். ஏன், அவர்களால் ஹிந்தி தெரிந்தும் நல்ல வேலைக்குப் போக முடியவில்லை? உண்மை என்ன தெரியுமா? தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, சீன மொழி என்று எந்த ஒரு மொழியும் உயர்ந்ததும் இல்லை, தாழ்ந்ததும் இல்லை. எல்லோருக்குமே தாய்மொழிக் கல்விதான் சிறந்தது, உயர்ந்தது. இன்று அமெரிக்கா, இங்கிலாந்து, ஃபிரான்ஸ், சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் ஒரே ஒரு மொழி அதாவது அவர் களுடைய தாய் மொழி மட்டுமே கற்கிறார்கள். அதனாலே கற்பதை சிறப்புற கற்றுத் தேறுகிறார்கள். ஆனால், நம் நாட்டில் எல்.கே.ஜி. முதல் தமிழையும், ஆங்கிலத்தையும் ஒரே நேரத்தில் கற்றுக்கொடுப்பதால், இரண்டுமே சுமையாகிப் போகிறது. ஆரம்பப்பள்ளிக்கு ஒரு மொழிக் கல்வியே சிறந்தது. ஆனால், இன்றைய யுகத்தில் அதற்கு வாய்ப்பே இல்லை.




**? மண்ணுக்கும் பெண்ணுக்கும் மனிதன் பேயாய் அலைவது ஏன்?**

**- ஆர்.நாகராஜன், ராஜபாளையம்.**

**ஞானகுரு :**

மண், பொன், பெண் போன்றவற்றை அடைந்துவிட்டதாக நினைக்கலாமே தவிர, உரிமை கொண்டாட முடியாது. எத்தனை ஏக்கர் நிலம் வாங்கி னாலும், எத்தனை பவுன் நகை வைத்திருந்தாலும், எத்தனை பெண்களை அடைந்தாலும், எதுவுமே யாருக்கும் சொந்தமாக இருக்கப்போவதில்லை. நிலம் அதே இடத்தில் அப்படியே இருக்கும். அதன் உரிமையாளர்கள் மட்டும் மாறிக்கொண்டே இருப்பார்கள். அவ்வளவுதான் வாழ்க்கை. எனவே, அதிகம் அலைபவர்கள் அவஸ்தைப்படுவார்கள்.



www.gyanaguru.com

# ஞானகுரு பதில்கள்

**? வாழ்வின் பலம்... பலவீனம் எது?**

**- எம்.நாகஜோதி மணிகண்டன், ராமநாதபுரம்**

**ஞானகுரு :**

தினமும் விதவிதமான மரணங்களை பார்க்கவும், கேட்கவும் செய்கிறார் என்றாலும், தன்னையும் இந்த மரணம் தீண்டிவிடும் என்று எவரும் எண்ணுவதில்லை. மரணத்தை வென்றவர் போலவே வாழ்க்கையை நடத்துவதுதான் மனிதரின் மாபெரும் பலம். தன்னுடைய நிறம், உடல் அமைப்பு, வறுமை, உறவுகளின் உதவியின்மை போன்றவற்றை தங்கள் பலவீனமாக மனிதர்கள் நினைக்கிறார்கள். இவை எதுவும் பலவீனம் அல்ல. காலத்தை நழுவ விடுவது மட்டுமே பலவீனம்.



**? இறைவன் மீதான பக்தியும் நம்பிக்கையும் வைப்பது வாழ்க்கை சங்கடங்களைத் தீர்க்குமா?**

**- எஸ்.மாரிகுமார், ஸ்ரீரங்கம்**

**ஞானகுரு :**

தலைவலி, காய்ச்சல் வந்தவுடன் மருத்துவரை சந்தித்து, உடலில் இருக்கும் அத்தனை பிரச்னைகளையும் சொல்கிறார்கள். மருத்துவர் உடனே மருந்து, மாத்திரைகள் எழுதித் தருகிறார். அதனை நம்பிக்கையுடன் சாப்பிட்டு உடல் நலம் அடைகிறார்கள். இதனை அப்படியே பக்திக்கு பொருத்திப் பார்க்கலாம். கடவுளிடம் உங்கள் நோய் பற்றி எடுத்துச் சொல்கிறீர்கள். அவர் கேட்டுக்கொள்கிறார் என்றே நம்புகிறீர்கள். அது மட்டுமே நோயை தீர்த்துவிடும் என்று யாரும் நம்புவதில்லை. எத்தனை பெரிய பக்திமான் என்றாலும், ஞானி என்றாலும் கடவுளிடம் கோரிக்கை வைத்துவிட்டு, மருத்துவமனையில் போய் படுத்துக்கொள்கிறார்கள்.



**? விவசாயம் அழிவதற்கு மழை காரணமா அல்லது மனிதன் காரணமா?**

**- கே.கவிதா, ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**ஞானகுரு :**

மழை பொழியும்போது விளைவதும், மழை இல்லாத நேரங்களில் ஓய்வு எடுப்பதும் மண்ணின் இயல்பு. ஆனால், மண்ணை 12 மாதங்களும் மகசூல் தரும் வகையில் மாற்றும் மனிதர்கள்தான் மழை போதவில்லை என்கிறார்கள். எந்த காலத்திலும் இல்லாத வகையில் இப்போதுதான் அதிகமாக மகசூல் கிடைக்கிறது என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

**? லஞ்சம், ஊழல் குறைய நாம் மாறவேண்டுமா அல்லது அரசு மாற வேண்டுமா?**

**- ஏ.காந்திராஜன், நீலகிரி.**

**ஞானகுரு :**

நம்முடைய அவசரத் தேவைக்கு லஞ்சம் கொடுப்பது தவறு இல்லை என்ற எண்ணம்தான் அத்தனை மனிதர்கள் மனதிலும் உறைந்துகிடக்கிறது. அதேநேரம் அரசு லஞ்சத்தை ஒழித்தால் நல்லது என்ற ஆசையும் இருக்கிறது. இந்த அரசு என்பது நங்கள்தான். நீங்கள் எப்போது மாறுகிறீர்களோ, அப்போது அரசும் மாறிவிடும்.









**? தந்தையின் தொழிலை மகன் செய்வதை பலர் விரும்புவதில்லையே ஏன்..?**

**- கே.கருணாகரன், மதுரை**

**ஞானகுரு :**

மருத்துவர், வழக்கறிஞர், பெரும் தொழிலதிபர் தவிர பெரும்பாலோர் தங்கள் தொழிலை மதிப்பதில்லை. அதனாலே அந்தத் தொழிலில் அவர் பெரிய வெற்றி பெறவில்லை என்ற உண்மையும் புரிவதில்லை. உண்மையில், தந்தையின் தொழிலை மகன் இன்னமும் சிறப்பாக செய்ய முடியும் என்பதால் அப்படிப்பட்ட சூழல் உருவாக்கித்தருவது நல்லது. மோசமான தொழில் என்று எதுவுமே இந்த உலகில் இல்லை என்பதை அனைவரும் அறிதல் அவசியம்.

**? உறவினர் ஒருவர் கார், பங்களா, ஏசி என வசதியாக இருக்கிறார். அவரிடம் கடன் உதவி கேட்கலாமா?**

**- பி.முத்துலட்சுமி பாலமுருகன், திருவெறும்பூர்.**

**ஞானகுரு :**

ஒருவர் வசதியாக இருக்கிறார் என்பதற்காக, அவரிடம் கடன் கேட்க நினைப்பது எத்தனை கேவலமான சிந்தனை? தேவைப்படும் நேரத்தில் அவருக்கு உங்களாலும் ஏதேனும் உதவி செய்ய முடியும் என்றால் மட்டும் அவர் வீட்டுப் படியை மிதியுங்கள்.



**? மனைவி, பிள்ளைகளிடம் வெளிப்படையாக பாசத்தைக் காட்ட வேண்டுமா?**

**- ஏ.சரண்யா ராஜசேகரன், லால்குடி**

**ஞானகுரு :**

ஒரு பணக்காரர் தன்னுடைய மகனுக்கு விலை உயர்ந்த கார் ஒன்றை பரிசளிக்க விரும்பினார். அந்த காரை வாங்கி, அதன் சாவியை ஒரு புத்தகத்திற்குள் வைத்து மகனிடம் கொடுத்தார். தந்தை கொடுத்த புத்தகத்தை மகன் திருப்பிக் கூட பார்க்கவில்லை. ஏனென்றால் அவனுக்கு தந்தையின் செயல் பெரும் ஏமாற்றம். வெளிப்படையாக சொல்லப்படாத அன்பு இப்படித்தான் ஏமாற்றிவிடும். இந்தியாவிலேயே அதிக விற்பனையாகும் சோப்பு என்றாலும், அதற்கு தினமும் விளம்பரம் கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும். அப்போதுதான் மக்கள் மனதில் அந்த சோப்பு பற்றிய நினைவு இருந்துகொண்டே இருக்கும். அப்படித்தான் உறவுகளும். உங்கள் மனசுக்குள் மிகப்பெரிய பாசப் புதையலே வைத்திருக்கலாம். ஆனால், அதனை மற்றவர்கள் அறிய மாட்டார்கள். ஆகவே, அவ்வப்போது அன்பை வெளிப்படையாகப் பேசத்தான் வேண்டும். மனைவியாக இருந்தாலும், கணவனாக இருந்தாலும் தினமும் ஏதேனும் வகையில் பாசத்தைக் காட்டுவதே உறவை நீடித்து வைத்திருக்கும். கண்ணால் பேசினேன், ஏதேனும் வாங்கிக்கொடுத்தேன், செயலில் காட்டினேன் என்பதெல்லாம் கதைக்கு ஆகாது.





# ரஜினி போல் அஜித்தும் ஏமாற்றுப் பேர்வழி..?

ஆழ்மனமே தாழ் திறவாய்!

## அத்தியாயம்-23

ஒரு தயிர் பானை மட்டும் கையில் வைத்திருந்த ஏழையொருவன், பகல் கனவு கண்ட கதையை எல்லோருமே கேட்டிருப்போம். அவனுடைய கனவு அற்புதமாக இருக்கும். அதாவது, அவன் வைத்திருக்கும் தயிரை விற்று ஒரு கன்றுக்குட்டி வாங்குவான். அந்த கன்றுக்குட்டியை பெரிதாக வளர்த்து, குட்டிகள் போடச் செய்வான். நிறைய மாடுகள் சேர்ந்ததும் பால் விற்பனை செய்து ஒரு தொழுவம் கட்டுவான். அந்த தொழுவம் நிறைய மாடுகள் வளர்த்து பெரிய பங்களா வாங்குவான். அந்த பங்களாவில் எப்போதும் பணமும், பொருட்களும் கொட்டிக் கிடக்கும். அந்த பணத்தை திருடன் எடுக்க வந்தால், எட்டி உதைத்துவிடுவான்.

கனவு கண்ட மகிழ்ச்சியில் நிஜமாகவே காலை ஓங்கி உதைக்கவே, அந்த தயிர்ப்பானை உடைந்துவிடும். உள்ளதும் போச்சுடா என்று அந்த ஏழை வேதனைப்படுவான். ஆகவே, பகல் கனவு காண வேண்டாம் என்று சொல்லிக்கொடுப்பார்கள்.

ஆனால், இது ஒரு தவறான கற்பிதம். அவன் பகல் கனவு கண்டதில் எந்த தவறும் இல்லை. அவனுடைய கனவு மிகவும் தெளிவானது, நியாயமானது. ஒரு தயிர் பானையை வைத்து எப்படி ஒரு பங்களா கட்ட முடியும் என்பது வரையிலும் ரொம்பவே தெளிவாக திட்டமிட்டு இருப்பான். கனவுக்கும் நிஜத்துக்கும் வித்தியாசம் தெரியாமல், அந்த பானையை உடைத்தது வேண்டுமென்றால் தவறாக இருக்குமே தவிர, பகல் கனவு தவறே இல்லை.

இப்படி பகல் கனவு கண்டவர்கள்தான் இன்று மாபெரும் கோடீஸ்வரர்களாக இருக்கிறார்கள். சார்லி சாப்ளின், வால்ட் டிஸ்னி, திருபாய் அம்பானி, இன்ஃபோசிஸ் நாராயணமூர்த்தி போன்றவர்களின் வரலாற்றை புரட்டிப் பார்த்தால், இவர்களுடைய சாம்ராஜ்யத்தின் அடிப்படையே, அவர்களுடைய பகல்கனவு என்பது புரியும். ஆகவே, கோடீஸ்வரராக மாற வேண்டும் என்றால், முதல் கட்டமாக தெளிவான கனவு காண வேண்டும். அந்த கனவின் பாதையும் மிகத் தெளிவாக இருத்தல் வேண்டும். அதனால், பணக்காரராக வேண்டும் என்றால் பிரமாண்டமாக கனவு காணுங்கள், அந்த கனவை மீண்டும் மீண்டும் ஆழ்மனதில் காண வேண்டும். அந்த கனவு நியாயமாக இருக்கும்போது, நிச்சயம் கனவு பலித்துவிடும். ஆகவே, இரவு, பகல் என்று எல்லா நேரங்களிலும் கனவு காண்பதே போதும். அந்த கனவே சரியான பாதையில் அவரை கொண்டுபோய் சேர்த்துவிடும்.

சமீபத்தில் கல்லூரி மாணவர்களுடன் ஒரு உரையாடல் நடத்தினேன். அப்போது, 'அரசியலிலும் சினிமாவிலும் ஏமாற்றுக்காரர்களே அதிகம் இருக்கிறார்கள். நல்லவர் போன்று வேடமிட்டு தங்களுக்குத் தேவையான காரியங்களை சாதித்துக்கொள்வதில் அரசியல்வாதிகளும், திரைப்படக் கலைஞர்களும் கெட்டிக்காரர்கள்... ஆகவே, இவர்கள் பேசும் எந்த வார்த்தைகளையும் அப்படியே ஏற்றுக்கொள்ளக்கூடாது' என்று கூறினேன். அப்போது, 'அப்படியில்லை... அஜித் உண்மையிலே மிகவும்

நல்லவர், ரசிகர்களை மதிக்கிறார், மக்களை நேசிக்கிறார்..' என்று சில மாணவர்கள் கோபமாக குரல் கொடுத்தார்கள்.

அவர்கள் கூறியது இதுதான். நடிகர் அஜித்குமார் மற்ற நடிகர்கள் போன்று பணத்துக்காக வரிசையாக நிறைய படங்கள் நடிப்பதில்லை. நிதானமாக அறிவிப்பு செய்து, மிக நிதானமாக சூட்டிங் முடித்து, அவசரப்படாமல் ரிலீஸ் செய்வார்.

வெளியே தெரியாமல் ஏகப்பட்ட தர்மம் செய்துவருகிறார், அரசியலை விரும்பாதவர், யாரையும் அவதூறு செய்யாதவர், சினிமா விழாக்களில் பங்கெடுக்காதவர், எந்த நடிகைகளுடனும் இணைத்து கிசுகிசுக்கப்படாதவர் , பிரியாணி சமைத்துக் கொடுப்பார், மீன் குழம்பு வைத்துத் தருவார், கார், பைக் ரேஸ், டிரோன் என்று ஏகமாய் பாசிடிவ் செய்திகள் மட்டும் வருகின்றன.

அவருக்கு ரசிகர்கள் என்றால் உயிர், மக்கள் மீதும் நாட்டின் மீதும் அதீத பற்றும் அன்பும் வைத்திருக்கிறார். என் படத்தை மட்டும் பார்த்தால் போதும், என்னை பின்பற்ற வேண்டாம் என்று கூறுபவர். அதனாலே ரசிகர் மன்றங்களை ஏற்பதில்லை.

இப்படி எல்லாம் அஜித் குறித்து நிறைய நிறைய செய்திகள் எப்படி வெளியாகின்றன. யார் கொடுக்கிறார்கள். இதெல்லாம் உண்மையா என்று யாரும் யோசித்துக்கூட பார்ப்பதில்லை. ஏன் இப்படி எல்லோரும் சொல்லி வைத்தது போன்று ஒரே மாதிரி செய்திகளை வெளியிடுகிறார்கள்..? உண்மையிலே மக்கள் மீது அஜித்துக்கு அன்பு இருக்கிறதா..?

நிச்சயமாக இல்லை என்று உறுதியாக சொல்ல முடியும். ஏனென்றால், மக்கள் மீது அன்பும் மதிப்பும் வைத்திருக்கும் ஒரு மனிதரால் திரையில் ஒரு மாதிரியும் நிஜத்தில் ஒரு மாதிரியும் இருக்க முடியாது.

எம்.ஜி.ஆர். திரையுலகில் கொடிகட்டிப் பறந்தார். அவரது முகத்தைப் பார்ப்பதற்காகவே ரசிகர்கள் சினிமா தியேட்டருக்கு படம் எடுத்தார்கள். ஆண்கள், பெண்கள், முதியவர்கள் என்று வயது பாரபட்சமின்றி அத்தனை பேரும் எம்.ஜி.ஆரின் ரசிகர்களாக இருந்தார்கள். தன்னை உயிருக்கு உயிராக நேசித்த ரசிகர்களுக்கும் தமிழக மக்களுக்கும் எம்.ஜி. ஆரும் நன்றியுள்ளவராக இருந்தார். மக்களையும் ரசிகர்களையும் அவர் உயிருக்கும் மேலாக மதித்தார். இதை அவரது நிஜ வாழ்க்கையிலும் சினிமாக்களிலும் காண முடியும்.

ஒரு படத்தில்கூட அவர் குடிகாரராக நடித்தது இல்லை. சிகரெட், பீடி புகைத்தது இல்லை. பெண்களிடம் அத்துமீறி நடப்பதில்லை. பெற்ற தாய், தந்தை, சகோதரர்களை மதிக்கக்கூடியவராக இருப்பார். உழைப்புக்கு ஊதியம் தரவேண்டும் என்பதை வலியுறுத்துவார். பாடல்களிலும் வசனங்களிலும் நம்பிக்கை விதைப்பவராக இருப்பார். ஏழைகளுக்கும் உழைப்பாளர்களுக்கும் உதவும் உள்ளத்துடன் இருப்பார். அதனால்தான் அவரை வாத்தியார் என்று ரசிகர்கள் கொண்டாடினார்கள்.



> வெளியே தெரியாமல் ஏகப்பட்ட தர்மம் செய்துவருகிறார், அரசியலை விரும்பாதவர், யாரையும் அவதூறு செய்யாதவர், சினிமா விழாக்களில் பங்கெடுக்காதவர், எந்த நடிகைகளுடனும் இணைத்து கிசுகிசுக்கப்படாதவர் , பிரியாணி சமைத்துக் கொடுப்பார், மீன் குழம்பு வைத்துத் தருவார், கார், பைக் ரேஸ், டிரோன் என்று ஏகமாய் பாசிடிவ் செய்திகள் மட்டும் வருகின்றன.





**மந்திரச்சொல்**

கடைசி தீக்குச்சியை பற்ற வைப்பதில் உள்ள கவனம், முதல் குச்சியிலேயே வந்துவிட்டால் வாழ்க்கையை எளிதில் ஜெயித்துவிடலாம்.

மக்கள் மீது அன்பு இருக்கிறது என்றால், அதனை படங்களின் மூலம் இப்படித்தான் காட்ட வேண்டும். அஜித் ஒரு படத்துக்கு வித்தியாசமாக மீசை வைத்தால், அவரது பெரும்பாலான ரசிகர்கள் அதனை அப்படியே பின்பற்றுகிறார்கள். அவர் பேசும் வசனத்தை மீண்டும் மீண்டும் உச்சரிக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, அந்த ரசிகர்களுக்கு ஒரு நடிகராக எப்படிப்பட்ட வழியைக் காட்ட வேண்டும்..? எத்தகைய வசனங்களை மட்டும் பேச வேண்டும்..?

ஆனால், அஜித் அப்படித்தான் செய்கிறாரா? நிச்சயம் இல்லை. படம் மெகா சக்சஸ் ஆவதற்கும் தன்னை ஒரு சூப்பர் ஹீரோவாக ரசிகர்கள் ஏற்பதற்கும் திட்டமிட்டு காட்சிகளை அமைத்துக்கொள்கிறார்.

எம்.ஜி.ஆருக்குப் பிறகு கமல்ஹாசன், ரஜினிகாந்த் இருவரும்தான் அடுத்த மாஸ் ஹீரோவாக மாறினார்கள். கமல்ஹாசன் அரசியல் பிரவேசம் பற்றி அதிகம் வெளியே பேசியதில்லை. ஆனால், சமூக அக்கறையுள்ள பல படங்களில் நடித்தார். மேலும், வெளிநாட்டு தொழில் நுட்பங்களை தமிழுக்குக் கொண்டுவந்தார்.

ஆனால், ரஜினி ரசிகர்களையும் மக்களையும் தன்னுடைய செல்வாக்குக்கும் வருமானத்துக்கும் மட்டுமே பயன்படுத்திக்கொண்டார். அவரது அரசியல் ஆசைக்காக படங்களில் திட்டமிட்டு காட்சிகளையும் வசனங்களையும் புகுத்தி ரசிகர்களுக்கு ஆசையைத் தூண்டினார். படம் ரிலீஸ் நேரத்தில் ஏதாவது பரபரப்பாகப் பேசி டிக்கெட் விலையை உச்சத்துக்குக் கொண்டுசெல்வதை மிகச்சிறப்பாகச் செய்வார்.

'என் ஒரு துளி வியர்வைக்கு ஒரு பவுன் தங்கக்காசு கொடுத்தது தமிழ் அல்லவா... நான் லேட்டா வந்தாலும் லேட்டஸ்டா வருவேன்... சிஸ்டமே கெட்டுக் கிடக்குது, எல்லாத்தையும் மோட்டலா மாத்தப் போறேன்...' என்று புருடா விட்டது எல்லாமே தன்னுடைய சம்பாத்தியத்துக்கும், அதை காப்பாற்றுவதற்கும் மட்டுமே. ரசிகர்களுக்காக அவர் வாக்கு கொடுத்த பிரியாணி விருந்துகூட போட்டதில்லை. ராகவேந்திரா மண்டபத்தில் அசைவம் சமைப்பதில்லை என்று சமாதானம் சொல்வது எத்தனை பெரிய வெட்கக்கேடு..? அங்கே இல்லையென்றால் வேறு இடத்தில் வைத்து விருந்து கொடுக்க முடியாதா..?

ரஜினி போலவே அஜித்தும் ரசிகர்களையும் மக்களையும் திட்டமிட்டு ஏமாற்றும் வேலையை திறமையாக செய்துவருகிறார். நல்லவர் போன்று வேடமிடுவதும் ஒரு திட்டமிட்டு ஏமாற்று வேலையே. ரஜினி போலவே அஜித்துக்கும் உண்மையிலே மக்கள் மீது கொஞ்சமும் அன்பு இல்லை என்பதை நிரூபிக்கும் வகையில், அவரது அத்தனை படங்களிலும் வன்முறைக் காட்சிகள் நிரம்பி வழிகின்றன. ரத்தமும் கொடூரங்களும் கொட்டிக் கிடக்கின்றன.

அஜித் வெறுமனே ஒரு நடிகர்தானே என்று இந்த குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பிவிட முடியாது. சினிமாவில் கால் ஊன்றுவதற்கு சிரமப்படுகிறார் என்றால், அவருடைய சினிமாக்களை விமர்சனம் செய்வதற்கு அவசியம் இல்லை. அவர் இப்போது ஒரு பிரபலமான நடிகர். அவரை வைத்து படம் எடுப்பதற்கு தயாரிப்பாளர்கள் வரிசை கட்டி நிற்கிறார்கள். அவருடைய முழு சம்மதத்தின் பேரில்தான் கதை உருவாக்கப்படுகிறது. அவர் நினைத்தால் சமூக அக்கறையுள்ள படங்களில் நடிக்கமுடியும். சமூகத்துக்கு உதவும் வகையில் மக்களிடம் நல்ல கருத்துக்களை கொண்டுசெல்ல முடியும். அவரது ரசிகர்களுக்கு நல்ல வழியைக் காட்ட முடியும். எல்லா படங்களையும் அப்படி செய்யவில்லை என்றாலும் இரண்டு படங்களில் ஒன்று அப்படி செய்யலாம்.

ஆனால், அஜித் மக்களை பற்றி கொஞ்சமும் கவலைப்படுவதில்லை. தன்னுடைய சினிமாவை பார்த்து யார் கெட்டுப் போனாலும் அவருக்கு அதில் கவனமில்லை. அவருக்கு விஜய்யைவிட சிறந்த சூப்பர் ஹீரோவாக தன்னை காட்டிக்கொள்ள வேண்டும் என்பது மட்டுமே முக்கியம். அதற்காகவே அயோக்கியத்தனங்களும், திருட்டுத்தனங்களும், சூதாட்டங்களும், போதையும் அவரது படங்களில் ததும்பித்ததும்பி வழிகின்றன.

இப்போது விஜய், சூர்யா, விக்ரம் உள்ளிட்ட அத்தனை நடிகர்களும் அப்படித்தானே நடிக்கிறார்கள் என்றும் சொல்லி தப்பிக்க முடியாது. ஏனென்றால், அஜித் மட்டும் திட்டமிட்டு மிஸ்டர் க்ளீன் இமேஜை திரைக்கு வெளியே வளர்க்கிறார். நல்லவர் போன்று போலியாக ஒரு பிம்பத்தை வெளியே உலவ விட்டு, அந்த பிம்பத்தின் மூலம் பெரிய மார்க்கெட்டை தக்க வைக்கிறார். இப்படி திட்டமிட்டு இரட்டை வாழ்க்கை வாழ்வது ரசிகர்களுக்கும் மக்களுக்கும் தெரியாமல் இருக்கலாம், அவர் ஆழ்மனதிற்கு நன்றாகவே தெரியும்.

அவரது ஆழ்மனதை சமாளிக்க முடியாமல்தான் ஊரை விட்டு, நாட்டை விட்டு ஓடிக்கொண்டே இருக்கிறார். அவர், இனியாவது நல்ல படங்களைக் கொடுக்க வேண்டும். அதுதான் அவருக்கும் நல்லது, மக்களுக்கும் நல்லது.

ஒரு காலத்தில் மாமியார் மருமகள் தகராறு ரொம்பவே அதிகமாக இருந்தன. ஸ்டவ் வெடித்து மருமகள்கள் நிறைய பேர் பலியானார்கள். ஆனால், இப்போது அப்படி எந்த செய்திகளும் வருவதில்லை. அந்த மாமியார்கள் என்ன ஆனார்கள்...? எல்லா மாமியார்களும் திருந்திவிட்டார்களா..? அப்படி மாமியார்களின் ஆழ்மனதை மாற்றியது எது..?

**அடுத்து பார்க்கலாம்..**

# கரப்பான் பூச்சியின் காதல் கதை

ஒரு குட்டி கதை. மனோகரனும் ஈஸ்வரியும் பக்கத்து சீட்டில் வேலை பார்த்துவந்தனர். ஒரு நாள் ஃபைலில் இருந்த கரப்பான் பூச்சியைக் கண்டு பதறிய ஈஸ்வரி, அதிர்ச்சியி ல் மனோகரன் கையை இறுக்கமாக பற்றிக் கொண்டாள். கரப்பானை விரட்டினான். அந்த ஸ்பரிசம் அவர்களுக்குள் அன்பைக் கொடுத்தது. அது காதலானது. வீட்டில் எதிர்ப்பு வந்தபோதும் சமாளித்து திருமணம் முடித்துக் கொண்டார்கள். இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்து, வளர்ந்து, ஆளுக்கு ஒரு திசையில் செட்டில் ஆகிவிட்டார்கள். ஈஸ்வரிக்கு 60 வயது ஆகிவிட்டது. இப்போது கிச்சனில் கரப்பான் பூச்சியைக் காணும் ஈஸ்வரி, என்ன செய்கிறார் தெரியுமா..?

கொஞ்சமும் யோசிக்காமல் அடித்தே கொன்றுவிடுகிறாள். இப்போது ஈஸ்வரி கரப்பான் பூச்சிகளுக்கு அஞ்சுவதே இல்லை. ஒரு கரப்பான் பூச்சி அவளுடைய வாழ்க்கையை ஒட்டுமொத்தமாக வடிவமைத்துவிட்டது என்ற கோபம் இன்னமும் அவளுக்குத் தீரவே இல்லை. இதனையே பட்டர்பிளை எஃபக்ட் என்பார்கள். அதாவது எந்த ஒரு செயலுக்கும் ஒரு காரணம் இருக்கும். எந்த ஒரு செயலும் சும்மா நடப்பதில்லை என்று சொல்வார்கள்.

இது உண்மையா..? மனிதரின் ஒவ்வொரு செயலுக்கும் ஏதேனும் ஒரு அர்த்தமும் விளைவும் இருக்கிறதா..? இதனை விஞ்ஞானம் ஏற்றுக்கொள்கிறதா..?

இல்லை. மனித வாழ்க்கையில் நடக்கும் எல்லா விளைவுகளுக்கும், அவர்களது செயல்கள் மட்டுமே காரணமாக இருப்பதில்லை. எல்லா வெற்றிகளுக்கும் அவர் மட்டுமே காரணமாக எப்படி இருக்க முடியாதோ, அதேபோல் தோல்விகளுக்கும் அவர் மட்டுமே காரண மாக இருப்பதில்லை. ஆனாலும், தோல்வி நடக்கவே செய்யும். பொருத்தமான ஜாதகம் பார்த்து, நல்ல நாளில், நல்ல நேரத்தில் ஆயிரக்கணக்கான நபர்களின் ஆசிர்வாதத்துடன் திருமணம் நடைபெற்றாலும், அது



நிலைத்து நிற்கும் என்பது உறுதியில்லை. சீரான வேகத்தில் பயணம் செய்தால் இன்னும் அரை மணி நேரத்தில் வீட்டுக்குப் போய்விடலாம் என்று கணக்கு போடலாம்.

ஆனால், அப்படியே நடக்கும் என்பது நிச்சயமில்லை. சந்தோஷமாக சுற்றுலா செல்லும் நபர்கள், திடீரென செத்துப் போகிறார்கள். இனி, பிழைக்கவே வாய்ப்பில்லை என்று கருதப்படும் நபர்கள் ஆச்சர்யமாக குணமடைகிறார்கள். அரசு வேலையில் சேர்ந்துவிட்டால் நிம்மதியாக வாழலாம் என்று நம்பும் எல்லோரும் திருப்தியடைவதில்லை.

எனவே, செயல்களுக்கும் முடிவுகளுக்கும் இடையில் நிறைய இடைவெளி இருக்கிறது. நம்பிக்கையுடன் எடுக்கும் சில முடிவுகள், மோசமாக மாறுவதுண்டு. மகிழ்ச்சியான திருவிழா வில் மோசமான அனுபவங்கள் பெறுவதுண்டு. வாசனையால் தூண்டப்பட்டு நான்கு வடைகளை வயிற்றில் தள்ளிவிட்டு நாலைந்துநாட்கள் வயிற்றுவலியால் அவஸ்தைப் படலாம். இவையெல்லாம் நடக்கலாம், நடக்காமலும் போகலாம். தோல்விகளுக்கும் துன்பங்களுக்கும் உண்மையான காரணம் தேட முடியாதவர்கள் அல்லது இயலாதவர்கள் பில்லி சூனியம், முன் ஜென்ம வினை என்று எளிதாக ஏற்றுக்கொள் கிறார்கள். இவற்றால் ஒருபோதும் பிரச்னைகளைத் தீர்த்துவிட முடியாது. அதேநேரம், அறிவு கொண்டு ஆய்வு செய்தாலும் எல்லா நேரங்களிலும் உண்மையான காரணங்களைக் கண்டுகொள்ள முடியாது. அரசு கொண்டுவரும் பொருளாதார சீர்திருத்தம், கொரோனா தொற்று, பருவநிலை மாற்றம் போன்ற எத்தனையோ நிகழ்வுகள், நிறைய மனிதர்களின் தோல்விகளுக்குக் கண்ணுக்குத் தெரியாத காரணங்களாக நிற்கலாம்.

ஆகவே, எது நடந்ததோ அதை அப்படியே முதலில் ஏற்றுக்கொள்ளுங்கள். அதுதான் முக்கியம். அதன் பின்னர் காரணங்களைத் தேடுங்கள். அந்த காரணம் கிடைக்கலாம் அல்லது கிடைக்காமல் போகலாம். சரியான செயலை செய்திருந்தாலும், வேறு சில காரணங்களாலும் தோல்வி கிடைக்கலாம். எனவே, காரணம் தெரியவில்லை என்றதும் மூட நம்பிக்கையின் பிடியில் மாட்டிக்கொள்ளாதீர்கள். மீண்டும் முயற்சிப்பது மட்டுமே தீர்வு.

www.gyanaguru.com



விரைவில்...


ஞானகுரு
பதிப்பகத்தில்
இருந்து...




டபுள் ட்ரீட்


ஒரு விருந்து... ஒரு மருந்து...

www.gyanaguru.com














RAJAN Dental



Regain your confident smile with Full mouth Dental Implants at

Rajan Dental

# எல்லோருக்கும் நிரந்தரப் பற்கள் சாத்தியமா..?

பல்வேறு காரணங்களால் அனைத்து பற்களையும் இழந்தவர்களுக்கு நிரந்தர பற்கள் பொருத்தி சாதனை படைத்திருக்கிறார்கள், 60 ஆண்டுகள் பாரம்பர்யம் கொண்ட சென்னை மயிலாப்பூர் ராஜன் பல் மருத்துவமனை மருத்துவர்கள். இதுகுறித்து சீனியர் மருத்துவ நிபுணர்களிடம் பேசினோம்.

### ஸைகோமா ஆல்-ஆன்-4 சிகிச்சை

இந்த படங்களில் உள்ளவர்கள் அனைத்து பற்களையும் இழந்து எங்களிடம் நிரந்தர பற்கள் பொருத்தி கொண்டவர்கள். எங்களுக்குத் தெரிந்தவரை படத்தில் உள்ள 5 வயது குழந்தை தான், ஆசியாவிலேயே முதல் டென்டல் இம்பிளான்ட் பொருத்திய குழந்தை. அதே போல நாங்கள் 85 வயது நிரம்பிய முதியவருக்கும் நிரந்தர பற்கள் பொருத்தி உள்ளோம்.

முதுமையால், ஈறு நோய்களால், விபத்தால், கருப்பு பூஞ்சையால் (COVID), பிறவி குறைபாடுகளால் பற்களையும் தாடை எலும்பையும் இழந்தவர்களுக்கு இன்று உலகம் முழுவதும் நவீன ஸைகோமா ஆல் ஆன் 4 சிகிச்சைதான் (Zygoma All-on-4) சிகிச்சையே மேற்கொள்ளப்படுகிறது. இதனை கடந்த 30 ஆண்டு காலமாக ராஜன் பல் மருத்துவமனையில் ஓரல் டிஜிட்டல் ஸ்கேன், 3D பிரின்டட் ஸ்டென்ட்ஸ், கோன் பீம் சிடி ஸ்கேன் துணையுடன் கம்ப்யூட்டர் முறையில் ஆய்வு மேற்கொண்டு, நான்கே நாட்களில் நிரந்தர செயற்கை பற்கள் பொருத்துகிறோம்.

நாங்கள் பொருத்தும் செயற்கை பற்கள் அக்ரலிக், செராமிக்கால் தயாரிக்கப்படுவதால், 10 ஆண்டுகள் முதல் 30 ஆண்டுகள் வரை நீடித்து உழைக்கும். இதனால் மாறாத முகவடிவம், திருப்தியான உணவுப் பழக்கம், தெளிவான பேச்சு மற்றும் தன்னம்பிக்கையும் கிடைக்கும். இயற்கை பற்கள் போன்று உணவை நன்றாக மென்று சாப்பிடலாம் என்பதால் ஜீரணிக்கும் தன்மை அதிகரித்து நோய் பாதிப்பும் குறையும். மேலும், இந்த சிகிச்சையால் ஈறு தொற்று நோய் மற்றும் சர்க்கரை நோயும் கட்டுப்படுவது போனஸ் நன்மை” என்றனர்.

### பற்கள் சீரமைப்பு

தொடர்ந்து பேசிய மருத்துவர்கள், “ஒருவரது புன்னகையை அழகாக்குவது சீரான பல்வரிசை தான். ஆனால், எல்லோருக்கும் அப்படி இயற்கையில் அமைந்து விடுவதில்லை. தெற்றுப்பல், எத்துப்பல், கோணல் வரிசை, ஒன்றன் மீது ஒன்று வளர்ந்திருப்பது, மேல் மற்றும் கீழ் பற்கள் சீரற்று அமைந்திருப்பது போன்றவை உண்பதற்கு இடையூறாக இருப்பதுடன் தன்னம்பிக்கையையும் குலைத்துவிடும். ஆனால், இப்போது இந்த அனைத்து குறைகளும், அலைன்மென்ட் டெக்னாலஜி மூலம் எளிதாகவும், முழுமையாகவும் எங்களால் சீர் செய்யப்படுகின்றன.

பற்கள் சீரமைப்பு மட்டுமின்றி தாடை சீரமைப்பு, நாடி சீரமைப்பு, தாடை சீரமைப்பு, இருக்கும் பற்களை டேமேஜ் செய்யாமல் அழகு படுத்துதல், ஈறுகளின் அளவை குறைத்து புன்னகையை சரி செய்தல், கம்பிகள் மூலம் பற்களின் ஒழுங்கின்மையை சரி செய்தல் போன்ற அனைத்து சிறப்பு சிகிச்சைகளும் நாங்கள் மேற்கொள்கிறோம்.

### காணொளி ஆலோசனை

வெளி ஊர்களில் உள்ளவர்கள் மொபைல் போன் வாட்ஸ்-ஆப் வீடியோ கால் மூலம் எங்கள் மருத்துவர்களை தொடர்பு கொண்டு முதல் கட்ட ஆலோசனை பெற நாங்கள் வசதி செய்கிறோம். மேலும் தொடர்புக்கு...

**ராஜன் பல் மருத்துவமனை,**
எண்.56, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை,
மைலாப்பூர், சென்னை-600004. தொலைபேசி-044 40105050, அலைபேசி: +91 9789001100,
www.rajandental.com.